விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 25 திங்கட்கிழமை (07.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110




# தற்கொலைக் குண்டுத் தாக்குதலில்
# அமைச்சர் ஜெயராஜ் உட்பட 14 பேர் பலி



## 90ற்கும் அதிகமானோர் படுகாயம்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்திலுள்ள வெலிவேரிய பகுதியில் நேற்றுக் காலை 7.40 மணியளவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட 14 பேர் கொல்லப் பட்டுள்ளனர். மேலும் 90 பேர் படுகாயமடைந் தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



## ஜெயராஜின் கொலைக்கு ஜனாதிபதி மகிந்த கண்டனம்

(கொழும்பு)

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள் ளே கொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன் மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நீண்ட காலமாக கம்பஹா மாவட்ட மக்களால் பெரும் எண்ணிக்கையான வாக்குகளால் நாடாளு மன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதுடன் மக் களின் நன்மதிப்பைப் பெற்ற பிரதிநிதி என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள் ளே உட்பட உயிரிழந்தவர்களின் குடும்ப்ங்க ளுக்குத் தனது (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜெயராஜின் கொலைக்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்காகி யுள்ள ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் சேவையை நாடு இழந்துள்ளது. ஆயுதங்க ளாலும் பயங்கரவாதத்தினாலும் இடம் பெறும் மனிதாபிமானமற்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

## பூரண அரச மரியாதையுடன் வியாழனன்று இறுதிக் கிரியை

(கொழும்பு)

குண்டுவெடிப்பில் உயிரிழந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் இறு திக் கிரியையினை எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை பூரண அரச மரியாதையுடன் நடத்துவதற்கு அரசாங்கம் நேற்று ஞாயிற் றுக்கிழமை தீர்மானித்தது.

ஜனாதிபதி மகிந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## மரதன் ஓட்டப் போட்டியாளர் போன்றே குண்டுதாரி ஊடுருவல்

### இரகசிய பொலிஸ் விசாரணையில் தெரிவிப்பு

(கொழும்பு)

கம்பஹா வெலிவேரிய பகுதியில் அமைச் சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயினை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை இரகசி யப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சர் ஒருவருக்கு வழங் கப்பட வேண்டிய பாதுகாப்புக்கள் வழங்கப் பட்டுள்ளபோதிலும் இவ்வாறானதொரு குண் டுத் தாக்குதல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெப்பிட்டிக்கொல்லாவவில் கிளைமோர்த் தாக்குதல்

(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹெப்பிட் டிக்கொல்லாவவில் நேற்று ஊர்காவற்படை யினர் மீது நடாத்தப்பட்ட கிளைமோர்த் தாக்கு தலில் 2 ஊர்காவற்படையினர் காயமடைந் துள்ளனர்.

ஹெப்பிட்டிக்கொல்லாவ கல்மிலெவெட்டி யாப் பகுதியில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## போரில் வெற்றி பெறும் வரை ஏ-9 பாதை திறக்கப்படமாட்டாது

### யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடபோர் முனையில் போரில் வெற்றி பெறும் வரை ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட மாட்டாது என்று இராணுவத்தின் யாழ்.மாவட் டக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர சிறி தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டிற்குப் பயணம் செய்த தென்னிலங்கை ஊடகவியலாளர்களிடம் பேசும்போது அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

விடுதலைப்புலிகளைப் போரில் முறியடிக் கும் வரையிலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நிர்வாகத்தின் முடிபின் பிரகாரமே மடுமாதா சிலை அகற்றப்பட்டது

### சண்டே ரைம்ஸுக்கு மன்னார் ஆயர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து எமக்கு எந்த அழுத்தங்களும் பிரயோகிக்கப் படவில்லை. எமது முடிபின்படியே மடு மாதா சிலையை நாம் அகற்றியிருந்தோம் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சண்டே ரைம்ஸில் தெரி விக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

மடுப் பகுதி மீதான படை நடவடிக்கை உக் கிரமடைந்துள்ள (10 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

மிதிவெடி வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டோருக்கு

எம்மால் இயன்ற உதவிகளை வழங்குவோம்.

'சர்வோதயம்' 'யுனிசெவ்'



சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்ல முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

## வாரியபுல சிறைச்சாலையிலிருந்து ஏழு கைதிகள் தப்பியோட்டம்

(கொழும்பு)

வாரியபுல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட ஏழு சந்தேக நபர்கள் நேற்று தப்பிச் சென்றுள்ளதாக வாரியபுல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமரட்ட விஜய முனி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் சிறைச்சாலையின் வேலியை வெட்டித் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் தப்பிச் சென்ற சந்தேக நபர்களில் இரண்டு பேரை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஏனைய ஐந்து சந்தேக நபர்கள் தொடர்பாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் சந்தேக நபர்களை தேடும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-2)

## ஸ்ரீ இராம நவமி உற்சவம்

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி ஸ்ரீ இராம நவமி உற்சவம் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு ஆயிரத்து எட்டு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகும் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீ இராமர் தாலாட்டுப் பூசையுடன் உள் வீதியுலா இடம்பெறும்.

மாலை 2.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சீதா இராமர் அனுமார் சங்கரத் தாழ்வார் சகிதம் வெளி வீதியுலா வருவார். (ச)

## க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் -2007

### பரு.ஹாட்லிக் கல்லூரி

10ஏ:- பா.கோகுலன், ம.பார்த்தீபன், சி.சிவாஸ்கர், கி.சிறிகுமார், ச.விதுரன்.

9ஏ:-சி.அனோஜன், தே.பிரணவன், பு.ராஜாராம், சி.ஜெயராம், சி.சிவராம், சி.சிறிரஞ்சன், இ.வனோஜிதன், க.சிவசுதன், சொ. அருண், சி.ராஜிபவன்.

8ஏ:-சி.நிஷாந்தன், சோ.பாலதினேஸ், த.துவாரகன், இ.வினோதன், ரி.குகேந்திரன்.

7ஏ:-க.ராகுலன், அ.ஹரிகாலன், கி.மயூரன், ச.சர்வானந்தன், இ.ரமணச்சந்திரா, ச.அகிலன், இ.பிரதீபன், அ.வேல்வேந்தன்.

### பரு.மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை

10ஏ:- ஐ.யோகல்யா, க.கோபிதா, கு.பவிதா, ம.கோபிகா, இ.சுகன்யா, க.பிரதீபா, த.தர்சிகா, கே.கோமசிந்துஜா, கி.சுஜானி, செ. அபர்ணா, சி.சோபிகா.

9ஏ:-அ.றம்யா, ஹெ.பானுசா, நா.பிரசாந்தினி, இ.பாமா, சு.சுபாங்கி, அ.சஞ்சியா, ஜெ.ஜெசிதா, செ.லாவண்யா, சி.மெக்ஸி பாரதா, கி.கௌதமி.

8ஏ:- பி.யாசினி, பா.மதுரா, ந.சாலினி, செ.சாமினி, அ.பிரியங்கா, சி.நளினா, சி.சிவகௌரி.

7ஏ:-இ.சரண்யா, சி.மாருதி, இ.கோபிநங்கா, வே.சுகன்யா, யா.ராஜினி, ம.ஜெசிந்தா, இ.கிருத்திகா.


6ஏ:- சி.துளசி, பா.ஆரணி.

5ஏ:-பா.மாதுமை, சி.பவித்திரா, சி.சோபிகா, சி.நிரஞ்சனா, வே.ஜெனிபா. (ச-52)

## புனித சூசையப்பர் திருவிழா

(ஊர்காவற்றுறை)

புனித சூசையப்பரின் வருடாந்த மேதின விழா கொடியேற்றத்துடன் இம் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி மே முதலாம் திகதி திருவிழா திருப்பலி புனிதரின் சொரூபப் பவனி ஆசீர் ஆகியவற்றுடன் நிறைவு பெறுகின்றது. (ஏ-72)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில் ஏழாம் திருவிழாவான கடந்த வெள்ளிக்கிழமை விசேட அலங்காரத்துடன் கண்ணகி அம்மன் காட்சியளிப்பதையும் விசேட மேளக் கச்சேரி இடம்பெறுவதையும் இளம் தவில் வித்துவான் ஒருவரை கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

## மடுவை போர்ச் சூழல் அற்ற பகுதியாக மாற்ற யாழ்.ஆயர் இல்லத்தினர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மடுப்பிரதேசத்தை போர்ச் சூழலற்ற பகுதியாக மாற்ற வேண்டும் என யாழ்.ஆயர் இல்லத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ் ஆயர் இல்லம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மடுப்பகுதியில் நடந்துவரும் போர் அனர்த்தங்கள் குறித்தும் சரித்திரத்தில் முதல் தடவையாக மடு அன்னையின் திருச்சொரூபம் மடுப்பகுதியை விட்டு வெளியேறியது குறித்தும் வேதனையும், கவலையும் அடைந்திருந்த நிலையில் இம்மடலை யாழ்.மறைமாவட்ட ஆயர், குரு முதல்வர், குருக்கள் துறவியர், பொதுநிலையினர் சார்பாக எழுதுகின்றோம்.

மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், குருக்கள். துறவியர் பொதுநிலையினரின் வேதனையிலும், கவலையிலும் நாம் பங்கெடுப்பதோடு போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் உடனடியாக மடுப்பகுதியின் புனிதத்தை மதிக்கும் வகையில் இப் பிரதேசத்தை விட்டு அகல வேண்டுகின்றோம்.

மிக விரைவில்இப் புனித பிரதேசம் போர் சூழலற்ற பகுதியாக மாறி இறை மக்கள் பாதுகாப்பாக சென்று ; வழிபடக்கூடிய சூழல் உருவாக வேண்டுமென குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் ஒப்பமிட்டு மன்னார் ஆயருக்கு அனுப்பிய கடிதத்தில் அமைவதாக ஆயர் இல்ல செய்திக் குறிப்பில் தெரிவிக்கின்றது. (ச)


35 1973 - 2008

வருடங்களாக தனித்துவம் பெற்ற நிறுவனத்தில்

O/L Day Class

ஏப்ரல் 10 இல் ஆரம்பம்

காலை 8.00 - பி.ப 1.00 வரை

இன்று முதல் பதியும் 30 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்

The Express Institute

Irupalai, Kopay. -அதிபர்



# TENDER NOTICE

St.John Ambulance, Jaffna, No: 161,1st Cross Street, Jaffna.

**Sealed tender for construction of training centre.**

Tender documents could be obtained from the above address and accepted in sealed cover in the same address between 9.00 am -2.00 pm before 13th April-2008

Any further clarification on this matter could be obtained from Telephone No:0212223166, 2225599 or 0602214444.

**S.Selvaranjan O.St.J.**
**District Commissioner.**

(1072)

**St.John Ambulance,**
**Jaffna.**



கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

விடுமுறைக்கால 12 நாட்கள் வகுப்புக்கள்

பாடசாலை ஆசிரியைகள், மாணவிகள் மற்றும் மகளிருக்குமானது.

பப்றிக் வர்ணம் தீட்டுதல் • பூவேலை • கைவேலை • கூந்தல் அலங்காரம் • அடிப்படைத் தையல் • சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல் • அடிப்படை Facial அழகுக்கலை மற்றும் மணப்பெண்கள் அலங்காரம்

ஆரம்பம் -10-04-2008 வியாழன் காலை 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 1.00 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

- பதிவாளர்.

(சி-971)

# இன்று ஒரு தகவல்

## சீதையின் சிரிப்பு!

சீதை சிறைவைக்கப்பட்டிருந்த அசோக வனத்திலே ஒரு மரத்தின் மீது அனுமார் உட்கார்ந்திருக்கிறார். இராவணன் வருகிறான்... ஏதேதோ சொல்லிப் பார்க்கிறான். "நதியின் பிரவாகம் போனது போனதுதான். மறுபடியும் திரும்பிவராது! உன்னுடைய இளமையை ஏன் இப்படி வீணாக்கிக் கொண்டிருக்கிறாய்? என்னைக் கல்யாணம் செய்துகொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டியது தானே!..." என்கிறான்.

இத் தகாதவார்த்தையைக் கேட்டதும் யாருக்குமே கோபம் வருவது இயல்பு. ஆனால் சீதை ஒரு துரும்பை அவன் முன் போட்டு புன்சிரிப்புடன் அவனுக்குப் பதில் சொல்வதாக வான்மீகி எழுதியிருக்கிறார். இந்த இடத்திலே நமக்கு ஒரு சந்தேகம். சீதை முகத்திலே புன் சிரிப்பு வருவதற்குக் காரணம் என்ன? இந்தச் சங்கத்திலே பக்திப் பிரசங்கம் செய்கிற ஒருவர் தீர்த்து வைக்கிறார் எப்படித் தெரியுமா?

சீதா கல்யாணம் நடந்த சமயத்திலே பரமசிவனுக்கு அழைப்பு அனுப்பவில்லையாம்! ஏன் தெரியுமா? விலாசம் கிடைக்கவில்லையாம்! அவர் சர்வலோக வியாபதி ஆச்சே! எந்த விலாசத்துக்கு அழைப்பு அனுப்புவது என்ற பிரச்சினை. ஆனால் பரமசிவன் சும்மா இருக்கவில்லை.

அழைப்புக் கிடைக்காத போதிலும் சீதைக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டதும் புறப்பட்டு விட்டார். ஆனால் அவர் வந்து சேர்வதற்குமுன் திருமணம் முடிவடைந்துவிட்டது. மணமக்கள் எல்லாருடைய காலிலும் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் பரமசிவன் அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டவுடன் இராமரும் சீதையும் அவர் காலிலே விழுந்து வணங்கினார்கள். சீதை பரமசிவனைப் பார்த்து "நீங்கள் எங்களுக்கு ஒரு பரிசும் கொடுக்க வேண்டாம்; தங்களுடைய ஆசி மட்டும் இருந்தால் போதும்" என்றாராம். "ஏன் பரிசு வேண்டாமென்று சொல்கிறாய், என் கையிலே ஒரு பொருளும் இல்லை என்பதைப் பார்த்துவிட்டு அப்படிச் சொல்கிறாயா? என்று கேட்டிருக்கிறார் பரமசிவன்.

"உங்களுக்கு ஏன் வீண்சிரமம் என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்" என்றார் சீதை. "அப் படியெல்லாம் நினைத்துவிடாதே... என்னிடம் மிக உயர்ந்த பொருள் ஒன்று இருக்கிறது. அதை உனக்குப் பரிசாகக் கொடுக்கப் போகிறேன் என்றார். அவர் "அது என்ன? என்று கேட்டாள் சீதை. என்னுடைய புன் சிரிப்பு" என்றார் சிவன். "அது எப்படி உயர்ந்த பொருளாகும்?" "என்றாள் சீதை. ஏன் ஆகாது? என் புன்சிரிப்பால் திரிபுரம் எரிந்தது தெரியுமா உனக்கு?" என்றார் சிவன்.

இப்படி அப்பொழுது வாங்கிய அந்தப் பரிசுதான் இன்று அசோகவனத்தில் சீதையிடம் இருந்தது. இராவணனுக்கு முன்னால் ஒரு துரும்பைப் போட்டுவிட்டு சீதை புன்முறுவலோடு பதில்சொல்வதாக வான்மீகி எழுதியிருப்பதற்கு இதுதான் காரணம். அந்தச் சிரிப்பு திரி புரத்தை எரித்தது. இந்தச் சிரிப்பு இலங்கையை எரிக்கப்போகிறது என்பதைக் காட்டுவதற்காகத்தான் சீதை முகத்திலே சிரிப்பு தெரிந்தது என்று விளக்கம் கொடுக்கிறார் அந்தச் சமயப் பிரசங்கி.

ஆகக்கூடி, ஒரு சிரிப்பிலே எவ்வளவு அர்த்தம் இருக்கிறது என்பதைப் பார்த்தீர்களா? நம்ம ஆள் ஒருவர் ஒரு நாள் மிகவும் சாவகாசமாக முகத்திலே புன்முறுவலுடன் வந்து கொண்டிருந்தான். "என்ன சார்விஷயம் உங்கள் முகத்திலே தெரிகிற அந்தப் புன்முறலுக்கு என்ன காரணம்?" என்று அவரிடம் கேட்டேன்.

வைக்கோல் போர் தீப்பிடித்து எரிகிறது சார்... அதுதான் இப்படி வந்துகொண்டிருக்கிறேன் என்றார் அவர்.

என்ன சார் இவ்வளவு சாவகாசமாகச் சொல்கிறீர்கள்? வைக்கோல்போர் தீப்பிடித்து எரிகிறது என்றால் உடம்பு பதறவேண்டாமா? என்று கேட்டேன்.

"எதற்காக என் உடம்பு பதற வேண்டும்? எரிவது என்னுடைய வைக்கல் போரா" எதிர்வீட்டுக்காரனுடைய வைக்கோல் போரல்லவா எரிந்து கொண்டிருக்கிறது என்றார் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# நாட்டு நிலைமையை காரணம் காட்டி அபிவிருத்தியைப் பின்போடக்கூடாது

## அரச அதிபர் க.கணேஷ் உரை



நாட்டு நிலைமையைக் காரணம் கூறி அபிவிருத்தியைப் பிற்போட முடியாது. உத்தியோகத்தர்கள் தொண்டர்களாகக் கடமையாற்ற வேண்டும்என யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட ஆட்பதிவு திணைக்களத்தின் உப அலுவலகத்தை காரை நகர் பிரதேச செயலக வளாகத்தில் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஆட்பதிவு திணைக்களத்தின் முதலாவது பிரதேச ரீதியான உப அலுவலகம் நேற்று முன்தினம் காரைநகரில் திறந்துவைக்கப்பட்டது. காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகவும் ஆட்பதிவு திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர் திருமதி தி.ஸ்கந்தராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றும்போது, ஆட்பதிவு அடையாள அட்டை என்பது எமது வாழ்வில் இன்றியமையாததொன்றாக மாறி விட்டது. ஆகவே இதற்கு தகுதியுடைய அனைத்து மக்களிற்கும் ஆள் அடையாளஅட்டை வழங்க முயற்சி மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்கு உரிய அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதனூடாக சுயமாக தாமாக அடையாள அட்டை பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். இதற்காகவே ஆட்பதிவு திணைக்களத்தின் உப அலுவலகம் அந்தந்த பிரதேசங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டில் இருக்கும் நிலைமையைக் காரணம் காட்டி அபிவிருத்திகளைப் பின்போடமுடியாது. இந்நிலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொண்டர்களாக கடமையாற்ற வேண்டும். நல்லாட்சிக்கு வரைவிலக்கணமாக சேவை யாற்ற வேண்டும். காரை நகரின் பொன்னாலை பாலம் வீதி புனரமைக்க 545 மில்லியன் ரூபா ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மதிப்பீட்டு வேலை நடைபெற்று வருகின்றது. அதேபோல் காரைநகர் பிரதேச செயலகம் அமைப்பதற்கும் 32 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு அலுவலகம், வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது காரைநகர் மீளக்குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். இதற்கு அனைத்து உத்தியோகத்தரும் இன மத வேறுபாடுகள் இன்றி சேவைமனப்பான்மையுடன் கடமையாற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-246)

# சர்வதேச நிதி நிறுவனங்களால் முதல் காலாண்டில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களினால் 2008 ஆம் ஆண்டின் முதற் காலாண்டு காலப் பகுதியில் செயற்படுத்துவதற்காக மொத்தம் 39 செயற்திட்டங்களுக்கு 27 கோடியே 70 இலட்சத்து 9 ஆயிரத்து 313 ரூபா 20 சதம் மாவட்ட மீளாய்வுக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.அர சாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் 5 திட்டங்களுக்கு ரூபா 5 கோடியே 33 இலட்சத்து 72 ஆயிரத்து 30 ரூபாவுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒரு திட்டத்திற்கு 20 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாவுக்கும் கிறிஸ்தவ உதவி அமைப்பின் 4 திட்டங்களுக்கு 4 கோடியே 8 இலட்சத்து 49 ஆயிரத்து ஐநூற்று 75 ரூபாவுக்கும் ஜி.ரி.இசற்றின் 4 திட்டங்களுக்கு 2 கோடியே 27 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாவுக்கும் இடம் பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் 5 திட்டங்களுக்கு 50 இலட்சத்து 30 ஆயிரத்து 624 ரூபாவுக்கும் "உலக தரிசனம்" அமைப்பின் 12 திட்டங்களுக்கு 3 கோடியே 57 இலட்சத்து 3 ஆயிரத்து 650 ரூபாவுக்கும் போரூட் நிறுவன தின் ஒரு திட்டத்திற்கு 4 கோடியே 39 இலட்சத்து 5 ஆயிரத்து 533 ரூபாவுக்கும் பார்க் (PARC) அமைப்பின் ஒரு திட்டத்திற்கு 36 இலட்சத்து 23 ஆயிரத்து 750 ரூபாவுக்கும் உலக கனேடிய பல்கலைக்கழக சேவையின் இரு திட்டங்களுக்கு 5 கோடியே 98 இலட்சத்து 59 ஆயிரத்து 301 ரூபாவுக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் 4 திட்டங்களுக்கு 98 இலட்சத்து 56 ஆயிரத்து 850 ரூபாவுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஓ)

# இராசிபலன்

07.04.2008
(பங்குனி 25, திங்கட்கிழமை)
பிரதமை காலை 07.49 மணிவரை
அச்சுவினி முன்னிரவு08 .42 மணி வரை
துதியை பின்னிரவு 5.35 மணிவரை
இராகுகாலம் 07.37-09.07 மணிவரை
சுபநேரம்-12.07-01.37 மணிவரை
செல்லப்பா சுவாமி குருபூசை

| | |
|---|---|
| மேடம் | கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | காரிய அலைச்சல், பிரயாணம், சுபசெலவு, உறவினர் மனஸ்தாபம். |
| மிதுனம் | எடுத்தகாரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம். |
| கடகம | அதிகாரம், நல்லமுயற்சி, உறவினர் சந்திப்பு, உற்சாகம். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, முயற்சிதாமதம். |
| கன்னி | அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு, காரிய தாமதம், பணக்குறைவு. |
| துலாம் | களஷ்திரநன்மை, காரிய சித்தி, நண்பர்கள் உதவி, சுபநிகழ்வு. |
| விருச்சிகம் | தேகநலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுபநிகழ்வு. |
| தனுசு | வியாபாரநன்மை, அதிக செலவு, முயற்சி தாமதம், உறவினர் வருகை. |
| மகரம் | மாதாசுகம், சுபசெலவு, காரிய தாமதம், உறவினர் வருகை. |
| கும்பம் | கூட்டுமுயற்சி, அந்நியர் சந்திப்பு, பிரயாண நன்மை. |
| மீனம் | உணர்ச்சி வசப்படல், பணவிரயம், காரிய தாமதம், போசனசுகம். |

வளவன்




அமுதமென அருள் சுரக்கும் சந்நிதியான்

இன்று செல்வச்சந்நிதி கும்பாபிஷேகம்

ஆற்றங்கரையோர மருளோங்கு செல்வச் சந்நிதியில்
வெள்ளிக் கனிபோல மின்னும் அழகொளிர
அடியார்க் கள்ளி யருள் வழங்கும் - ஆனந்த
வேலவர்க் கபிஷேகம் காணக் கண் பெறுமே!

சந்நிதியான் கோவிற் கலசங்களும்
மணிக் கோபுரக் கலசங்களும்
பாலும் பழநீரும் பன்னீரும் சொரிய - அனுதினம்
அன்னம் பெருகியெழுந்து அடியார் பசிதீர
அமுதமது மருந்தாகி அடியார் பிணி தீர
வறுமை யகன்று வளம் பெருகி வளர்னமாய் நாம் வாழ
நாளும் பொழுதுமென நமைவிரட்டும் பயம் நீங்க
எங்கள் வேலவனார் "கும்பா பிஷேகம்" நிகழக் காண்பமே!

துரை கணேசமூர்த்தி




பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கும்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வை கல்லூரி அதிபர் திருமதி எஸ். குட்டித்தம்பி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## புத்தகம் கட்டும் பயிற்சி

யாழ்.மாவட்ட வலுவிழந்தோர் சங்கத்தைச் சேர்ந்த இருபது இளைஞர் யுவதிகளுக்கும் சுயதொழில் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு புத்தகம் கட்டும் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி வாரத்தில் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பிற்பகல் 1 மணியிலிருந்து மாலை 4 மணிவரை கொக்குவில் ஆடியபாதம் வீதியில் உள்ள தலைமைக்காரியாலய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. (அ-134)

## கமநெகும திட்டத்தின் இரண்டாம் கட்ட நிதி

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கமநெகும திட்டத்தின் கீழ் மலசலகூடங்களிற்கான இரண்டாம் கட்ட நிதி கிடைத்திருப்பதாக பிரதேச இணைப்பாளர் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை கிடைத்ததும் நிதி வழங்கப்படவுள்ளது எனத் தெரியவருகிறது. (அ-134)



யாழ்.செய்திகள்

## கசிப்பு விற்பனை அதிகரிப்பு

புத்தூர் கிராமசபை பகுதியிலுள்ள சில கிராமங்களில் கசிப்பு விற்பனை அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-134)

## விளையாட்டு மைதானத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத் திறப்பு விழா இன்று பி.ப 12.05 மணிக்கு காந்திசனசமூக நிலைய உபதலைவர் க.கிங்ஸ்லிகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காந்தி சனசமூக நிலையத் தலைவர் ம.வித்தியானந்தநேசனும், அதி சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகராட்சி மன்ற ஆணையாளர் மு.செ.சரவணபவனும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-6)

## பங்குனித் திங்கள் உற்சவம்

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய நான்காவது பங்குனித் திங்களும், கும்பாபிஷேக தின்மும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அம்பாளுக்கு அஷ்டோத்திர சதசங்காபிஷேகமும், பரிவர்த்தன மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகமும், விசேட பூசையும் மாலை 5 மணிக்கு நவசக்தி அர்ச்சனையும், விசேட அலங்காரப் பூசையும் நடைபெறவுள்ளது. (அ-7)

## சைவ வித்யா விருத்திச் சங்க மாணவர் 8பேர் உயர்தரம் கற்கத் தகுதி

திருநெல்வேலி சைவ வித்யா விருத்திச் சங்கத்தின் சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த எட்டு மாணவர்கள் தற்பொழுது வெளியாகியுள்ள க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.உயர்தர வகுப்பில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் ஆறு மாணவிகளும் இரண்டு மாணவர்களும் அடங்குவர்.

இவர்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-134)

## பழுதடைந்த மீன் விற்பனைக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீன் சந்தையில் பழுதடைந்த மீன்கள், திருக்கைகள் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதென யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதியின் விளம்பரங்களை குருநகர் சந்தையில் காணக் கூடியதாக உள்ளது.

மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-134)

# கொடுப்பனவை அதிகரிக்குமாறு அரச அதிபரிடம் லொறி உரிமையாளர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கப்பல் கட்டணங்களை காரணங்காட்டி அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் லொறி உரிமையாளர் சங்கமும் தமக்கான கொடுப்பனவுகளை அதிகரித்துத் தருமாறு அரச அதிபரைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை மற்றும் மயிலிட்டி துறைமுகங்களிலிருந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு 425 லொறிகள் பொருட்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

குறிப்பாக அரச களஞ்சியங்களுக்கு கப்பலில் வரும் பொருட்களை இந்த லொறிகளே ஏற்றிப் பறித்து வருகின்றன.

டீசல் உள்ளிட்ட எரிபொருட்களது விலை அதிகரிப்பு மற்றும் வாகன ரயர்கள், உதிரிப் பாகங்களுக்கு குடாநாட்டில் நிலவும் தட்டுப்பாடு என்பவற்றைக் காரணம் காட்டியே அவர்கள் இவ் அதிகரிப்பை கோரியுள்ளன.

லொறிக் கூலி நீண்டகாலமாக மீளாய்வு செய்யப்படவில்லையென குற்றச்சாட்டும் யாழ்.மாவட்ட லொறி உரிமையாளர் சங்கம், பல நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே தமது சேவை தொடர்வதாகவும் தெரிவித்துள்ளது. (அ-5)

# புத்தகங்கள் வழங்கப்படாமையையிட்டு அதிகாரிகளுக்கு அரச அதிபர் எடுத்துரைப்பு

யாழ்.மாவட்டத்தில் சில வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்கள் இதுவரை வந்து சேரவில்லை என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கவலை தெரிவித்துள்ளார்.

7ஆம், 11ஆம் தரப் பாடப் புத்தகங்கள் முதலாம் தவணை முடிவடைந்த நிலையில் இதுவரை வந்து சேரவில்லை என்று அவர் கூறினார். மாணவர்களின் கல்வி நடவடிக்கையை நல்ல முறையில் தொடர வேண்டுமாயின் உரிய நேரத்தில் பாடப் புத்தகங்கள் வழங்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் அவர் கூறினார். இதேவேளை புதுவருடத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் தேவையான பொருட்களை மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதுஎன அவர் கூறியுள்ளார்.

புதுவருடத்துக்கு தேவையான பொருட்கள் தனியார் துறையினர் மூலம் யாழ். மாவட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதனால் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என்றும் அவர்கூறினார்.

போக்குவரத்து செலவினங்கள் காரணமாக தென்பகுதியை விட பொருட்களின் விலை சிறிது அதிகமாகக் காணப்படுவதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். எனினும் பொருட்களின் விலையைக் குறைப்பது தொடர்பாக தாம் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-7)

# யாழ்.மாவட்டத்தில் மிதிவெடிகள் அகற்றும் பணி 2010 இல் முடிவுறும்?

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதைய மதிப்பீட்டின் படி 1 கோடி 85 இலட்சத்து 76 ஆயிரத்து 319 சதுர மீற்றர் நிலப் பரப்பு மிதிவெடி அபாயம் உள்ள பிரதேசமாக கண்டறியப்பட்டுள்ளது என யாழ். செயலக மிதிவெடி அகற்றும் பிரிவு தெரிவித்துள்ளது.

மிதிவெடி அகற்றும் ''ஹலோ ரெஸ்ட்'' நிறுவனமும், டெனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனமும் இதுவரை 90 இலட்சத்து 368 சதுரமீற்றர் நிலப்பரப்பில் மிதிவெடிகளை அகற்றியுள்ளது.

இந்த மிதிவெடி அகற்றிய பிரதேசம் தற்போது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது 59 இலட்சத்து 22 ஆயிரத்து 961 சதுரமீற்றர் நிலப்பரப்பில் மிதிவெடி அகற்றும் பணி முனைப்பாக இடம்பெற்று வருவதாக யாழ்.செயலக மிதிவெடி அகற்றும் பிரிவு தெரிவித்துள்ளது.

2010 ஆம் ஆண்டிற்குள் யாழ்ப்பாணத்தில் முழுமையாக மிதிவெடிகள் அகற்றப்பட்டு விடும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)



இருபாலை சீ.சீ.த.க.பாடசலையில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர்கள் ஐ.வேலாயுதர், அ.இராசரத்தினம் மற்றும் அகில இலங்கை சமாதான நீதவான் கே.தங்கவடிவேல் ஆகியோர் மாணவர்களால் மாலையிட்டு வரவேற்கப்படுவதையும் அருகில் கல்லூரி அதிபர் திருமதி க.சுந்தரலிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இளம் சமுதாய தலைவர்கள் விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

பண்டாரநாயக்க கல்வி நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இளம் சமுதாய தலைவர்கள் விருதுகள் கீழ்க்காணும் 15 பிரிவுகளைக் கொண்டது.

சமாதானத்தை கட்டியெழுப்புதல், சிறுவர்களின் உரிமைகள், தொழில்வாய்ப்பு /வாழ்வாதாரத் தொழில், கல்வி, (HIV) எச்.ஐ.வி/(AIDS) எயிட்ஸ்,மனித உரிமைகள், சமூக சுகாதாரம், இளைஞர்களை வலுவூட்டுதல், அனர்த்த முகாமை, விளையாட்டுக்கள், பெண் உரிமைகள், நிலைத்த சுகாதாரம், கலை/ கலாசாரம், விவசாயமும் நீர்ப்பாசனமும், தகவல் தொடர்பு தொழில்நுட்பம்.

இவ் விருதுகளுக்கு விண்ணப்பிப்போர் 31ஆம் திகதி மார்கழி மாதம் 2007 இல் 15 முதல்30 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 2008 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் நல்லூர் பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ)

## அத்தியடிப் பிள்ளையார் பெருந்திருவிழா

யாழ். அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவில் பெருந் திருவிழா 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 5.45 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும். (அ-7)

## வடமராட்சியில் ஆங்கில வகுப்புகள்

(அல்வாய்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து சேவை நோக்குடன் ஆங்கில வகுப்புகளை நடாத்தவுள்ளன.

+ இதில் IELTS பரீட்சையை தயார்படுத்துவதற்கான வகுப்பு.

+ க.பொ.த உயர்தரம் கற்றுத் தேர்ந்தவர்களுக்கான உயர் நிலை கற்கை நெறி (Advance Course)

+ அரச, அரச சார்பற்ற ஊழியர்களுக்கான விசேட ஆங்கில வகுப்பு ஆகியனவும் அடங்கும்.

தற்பொழுது இதில் சில கற்கை நெறிகள் பருத்தித்துறை தம்பசிட்டி வீதியில் அமைந்துள்ள (FORUT) போருட் நிறுவனத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றன. இக் கற்கை நெறிகளில் பயில விரும்புவோர் மேற்படி நிறுவனத்தில் சனி, ஞாயிறு தினங்களில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு, செயலாளர், பழைய மாணவர் சங்கம், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை என்ற விலாசத்திற்கோ அன்றி ச.சுந்தரமூர்த்தி, ஆங்கில பாட கல்விப் பணிப்பாளர் வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி என்ற விலாசத்திற்கோ கடிதமூலம் தொடர்பு கொள்ளலாம். நேரில் தொடர்புகொள்ள விரும்புவோர், சனி, ஞாயிறு தினங்களில் பருத்தித்துறை போருட் நிறுவனத்தில் தொடர்பு கொள்ளலாம். (ஓ-19,52)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான (நாச்சிமார் கோவில்) மஹோற்சவம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

உற்சவத்தில் 19 ஆம்திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 3 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (அ-7)

+++

(யாழ்ப்பாணம்)

அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 20 ஆம்திகதி முற்பகல் 11மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 4மணிக்கு திருவூஞ்சலைத் தொடர்ந்து கொடியிறக்கமும் நடைபெறும். (அ-7)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஜ் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-134)

## அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு லயன்ஸ் கழகம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட காக்கைதீவு, பொம்மைவெளி, ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட முப்பது பேருக்கு உடுபுடைவைகள், உலர் உணவுப் பொருட்கள் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் எஸ்.ராகவனால் வழங்கப்படவுள்ளதாக மானிப்பாய் பரீஷ் லயன்ஸ் கழகத்தலைவர் எஸ்.துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

ஒரு குடும்பத்திற்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-134)

# ஒபாமாவின் சவாலை ஏற்று ஹிலாரி வருமானத்தைப் பகிரங்கமாக அறிவித்தார்

(வோஷிங்டன்)

2000ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரை 8 கோடிக்கு டொலருக்கு மேல் வருமானம் ஈட்டியதாக ஹிலாரி அறிவித்துள்ளார்.

**அதிபர் தேர்தல்**

அமெரிக்க அதிபர் தேர்தல், நவம்பர் 4ஆம் திகதி நடைபெறுகிறது. இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான கட்சி ரீதியான தேர்தல் நடந்து வருகிறது. எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி வேட்பாளர் தேர்தலில் முன்னாள் அதிபர் கிளின்டனின் மனைவி ஹிலாரியும், கறுப்பின தலைவர் பாரக் ஒபாமாவும் போட்டியிட்டு வருகிறார்கள். இருவரில் யார் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப் படுவார்கள் என்பதை கணிக்க முடியாத அளவுக்கு இழுபறியாக உள்ளது.

அதிபர் பதவி வேட்பாளர்கள், வருமானத்தையோ, வருமான வரி செலுத்திய விவரத்தையோ வெளியிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. இருப்பினும், வேட்பாளர்கள் தாங்களாக முன்வந்து வெளியிட்டு வருகிறார்கள்.

**ஒபாமா சவால்**

அந்தவகையில், பாரக் ஒபாமா கடந்த வாரம் 2000ஆம் ஆண்டில் இருந்து 2006 ஆம் ஆண்டுவரை வருமானவரி செலுத்திய விவரத்தை பகிரங்கமாக வெளியிட்டார். தன்னைப் போல், ஹிலாரியும் பகிரங்கமாக வருமான வரி கணக்கு விவரத்தை வெளியிட முடியுமா? என்று அவர் சவால் விடுத்தார்.

ஹிலாரி, தனது வருமான விவரத்தை வாக்காளரிடம் இருந்து மறைப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதையடுத்து, ஒபாமாவின் சவாலைஹிலாரி ஏற்றுக்கொண்டார். அவர் மற்றும் அவரது கணவர் கிளின்டனின் 2000 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலான வருமானம் மற்றும் வருமானவரி கணக்கு விவரங்களை ஹிலாரியின் தேர்தல் பிரசார நிர்வாகிகள் பகிரங்கமாக வெளியிட்டனர்.

அதன்படி, மேற்கண்ட 8ஆண்டுகளில் கிளின்டன் -ஹிலாரியின் வருமானம் 8.75 கோடி அமெரிக்க டொலராகும். இதில், கூட்டங்களில் பேசியதன் மூலமாக மட்டும் கிளிண்டனுக்கு கிடைத்த 4 கோடி டொலரும் அடங்கும். இந்த வருமானத்துக்காக, கிளின்டன் தம்பதியர் 2.64 அடங்கும் கோடி டொலர் வருமான வரி செலுத்தியுள்ளனர். மேலும், பல்வேறு நல்ல காரியங்களுக்காக 80கோடி டொலர் நன்கொடை அளித்துள்ளனர்.



இந்த வருமானவரி கணக்குகளை வெளியிட்டதன் மூலம், ஹிலாரி சாதனை படைத்து இருப்பதாக அவரது செய்தித் தொடர்பாளர் ஜேகர்சன் தெரிவித்தார்.

ஹிலாரியின் எதிரிகள் யாரும் இவ்வளவு தொகையை கணக்கு காட்டியதில்லை என்றும் அவர் கூறினார். (அ-5)

## அமெரிக்க குண்டு வீச்சு விமானம் திடீரென தீப்பற்றிக் கொண்டது

(கட்டார்)

அமெரிக்காவின் பி-1 ரக குண்டு வீச்சு விமானம், கட்டாரில் உள்ள விமான தளத்தில் தரை இறங்கியது. அப்போது அது திடீரென தீப்பிடித்துக் கொண்டது. உடனடியாக அதில் இருந்த சிப்பந்திகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். இதனால் அவர்கள் காயமின்றி உயிர் தப்பினர். தீயணைப்பு படையினர், தீயை அணைத்தனர். இந்த சம்பவம் குறித்துவிசாரிக்க விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம், நடுவழியில் எரிபொருள் நிரப்பாமலேயே கண்டம் விட்டுகண்டம் பறந்து செல்லக்கூடியது ஆகும். (அ-5)

## விவாகரத்து கருக்கலைப்பு கடுமையான பாவம்- போப்

(வத்திக்கான்)

விவகாரத்து மற்றும் கருக்கலைப்புகள் மிகக் கடுமையான பாவம் என்று போப் பதினாறாம் பெனடிக்ட் தெரிவித்துள்ளார். வத்திக்கானில் நடைபெற்ற பிரார்த்தனையில் கலந்து கொண்டு உரையாற்றிய போப் கருக் கலைப்பு மற்றும் விவாரத்தை கடுமையாக விமர்சித்து பேசினார். கருக்கலைப்பு மற்றும் விவாகரத்து ஆகியவை கடுமையான பாவம் என்றும் கலாசார சீரழிவு என்றும் விமர்சித்தார். இவை மனித மாண்பை கெடுத்து விடும் என்றும் இவற்றால் தம்பதியினரின் குழந்தைகள் மிகவும் பாதிக்கப் படுவர் என தெரிவித்தார். (அ-5)

# தேர்தல் முடிவுகளை வெளியிடக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

(ஹராரே)

சிம்பாப்வே அதிபர் தேர்தல் முடிவுகளை வெளியிடக்கோரி முக்கிய எதிர்க்கட்சி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

சிம்பாப்வேநாடு, 28 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்திடம் இருந்து விடுதலை பெற்றது. முதலாவது அதிபராக ரொபேர்ட் முகாபே பதவி ஏற்றார். கடந்த 5 தேர்தல்களிலும் அவர் வெற்றி பெற்று, 28 ஆண்டுகளாக அதிபராக நீடித்து வருகிறார்.

அவரது பதவிக்காலம் முடிவதால், கடந்த 29 ஆம் திகதி அதிபர் தேர்தல் நடைபெற்றது. ரொபேர்ட் முகாபே மீண்டும் போட்டியிட்டார். ஜனநாயக மாற்றத்துக்கான இயக்கம் என்ற முக்கிய எதிர்க்கட்சியின் தலைவர் மோர்கன் ஸ்வாங்கிரை. அவரை எதிர்த்து போட்டியிட்டார்.

தேர்தல் முடிவடைந்து ஒரு வாரம் ஆனபோதிலும், அதிகாரபூர்வ தேர்தல் முடிவு களை தேர்தல் ஆணையம் இன்னும் வெளியிடவில்லை. இருப்பினும், மோர்கன் ஸ்வாங்கிரை வெற்றிபெற்று இருப்பதாகவும், அதனால் தான் தேர்தல் முடிவுகளை வெளியிடாமல் இருப்பதாகவும் அவரது கட்சியினர் குற்றம் சாட்டி வருகிறார்கள். தேர்தல் முடிவு களை வெளியிடுமாறு அமெரிக்கா. இங்கி லாந்து உள்ளிட்ட நாடுகளும். முன்னாள் ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் ஆகியோரும் வற்புறுத்தி வருகிறார்கள்.

**தில்லுமுல்லு**

ஆயினும், இன்னும் தேர்தல் முடிவுகள் வெயிடப்படவில்லை. ரொபேர்ட் முகாபே தோற்றுவிட்டதாக, ஒருபுறம் தகவல்கள் வெளியாகி வருகின்றன. அவர் தோற்றுவிட்டதால்தான், எப்படியாவது தில்லுமுல்லு செய்து பதவியில் நீடிப்பதற்காக, தேர்தல் முடிவுகளை நிறுத்தி வைத்திருப்பதாக குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

ஆனால், அதிபர் ரொபேர்ட் முகாபே யின் கட்சியினரோ, தேர்தலில் யாருக்கும் 50 சதவீத ஓட்டுகள் கிடைக்கவில்லை என்றும் எனவே விதிமுறைப்படி, இரண்டாவது சுற்று ஓட்டுப் பதிவு நடத்தவேண்டும் என்றும் கூறி வருகிறார்கள். இரண்டாவது சுற்று தேர்தலை சந்திக்க ரொபேர்ட் முகாபே தயார் என்றும் அவர்கள் கூறினர்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், முக்கிய எதிர்க்கட்சியான மோர்கன் ஸ்வாங்கிரையின் கட்சி, நீதிமன்றம் சென்றுள்ளது. அதிபர் தேர்தல் முடிவுகளை உடனே வெளியிட உத்தரவிடக் கோரி, ஹராரேயில் உள்ள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. மோர்கன் ஸ்வாங்கிரையை புதிய அதிபராக அறிவிக்க வேண்டும் என்றும் அது கேட்டுக் கொண்டுள்ளது. (அ-5)

# ஈராக்கில் பாதிரியார் சுட்டுக்கொலை

(ஈராக்)

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் வைத்து ஈராக்கிய பாதிரியார் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தற்போது ஷியா முஸ்லிம்களே அதிகமாக வசிக்கும் கர்ராடாவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சென் பீட்டர் மற்றும் சென்பால் தேவாலயத்தை சேர்ந்த பாதிரியார் யூசப் அடேல் கொல்லப்பட்டுள்ளார்.

இவரை போல இன்னும் பல முக்கியமான கிறிஸ்தவர்கள் சமீபகாலமாக ஈராக்கில் கொல்லப் பட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு மொசூலின் சால்டியன் கத்தோலிக்க ஆர்ச்பிஷப் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தி செல்லப் பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். (அ-5)

# நீதிபதிகள் பிரச்சினையில் கருத்துவேறுபாடா? பாகிஸ்தான் மக்கள் கட்சி மறுப்பு

(இஸ்லாமாபாத்)

அதிபர் முஷாரப்பால் பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் அதே பணியில் நியமிப்பது தொடர்பாக ஆளும் கூட்டணியில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை என பாக்.மக்கள் கட்சி தெரிவித்துள்ளது. அதிபர் முஷாரப் கடந்த சில மாதங்களுக்கு முன் உச்ச நீதிமன்ற நீதிபதி இப்திகார் சௌவுத்ரி உட்பட ஏராளமான நீதிபதிகளை பதவி நீக்கம் செய்ததுடன் அவர்களை சிறையிலும் அடைத்தார்.

**உலக தரிசனம்**

அடுத்து வந்த தேர்தலில் இப்பிரச்சினை முக்கிய இடத்தை வகித்தது. நவாஸ் ஷெரீப் கட்சி, சிறையில் அடைக்கப்பட்டிருந்த நீதிபதிகள் விடுவிக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் மீண்டும் அப்பதவியில் அமர்த்தப் படவேண்டும் எனவும் கோரியது. அதன்படி பாக்.மக்கள் கட்சி சார்பில் பிரதமராக பதவியேற்ற யூசுப் ரசாகிலானி, தனது முதல் உத்தரவாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த நீதிபதிகளை விடுவிக்க உத்தரவிட்டார். தற்போது மீண்டும் அவர்களை அதே பணியில் அமர்த்துவது தொடர்பாக பாக்.மக்கள் கட்சி சற்று சுணக்கம் காட்டி வருகிறது.

இவ்விஷயத்தில் அரசின் தன்னிச்சையான முடிவாக இல்லாமல் பாராளுமன்றம் மூலமாக நீதிபதிகள் மறுநியமனம் அமைய வேண்டும் என ஆசிப் அலி சர்தாரி விரும்புவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனவே இவ் விஷயத்தில் ஆளும் கூட்டணியில் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இதை பாக்.மக்கள் கட்சி மறுத்துள்ளது. (அ-5)



ரஷ்யா சென்றுள்ள அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ரஷ்ய அதிபர் புடினை அவரது இல்லத்தில சந்தித்தார். தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு புதிய வழிமுறைகள் வகுப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்த இருக்கின்றனர். மேலும் பேரழிவு, ஆயுதங்கள் ஒழிப்பு, பாதுகாப்பு, பொருளாதாரம் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

# சிம்பாப்வே தேர்தல் முடிவுகளை உடனடியாக அறிவிக்க வேண்டும்

## பிரிட்டிஷ் பிரதமர் கோரிக்கை

சிம்பாப்வே தேர்தல் முடிவுகளை உடனடியாக எவ்வித தாமதமும் இன்றி அறிவிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுன் கூறியுள்ளார்.

லண்டனுக்கு அருகே சர்வதேச தலைவர்கள் கலந்து கொண்டுள்ள மாநாடு ஒன்றில் பங்கேற்ற அவர் சிம்பாப்வே நிலவரத்தை உற்று கவனித்து வருவதாகவும் கூறினார்.

தென்னாபிரிக்க அதிபர் தபோ எம்பெகி கூறும் போது சிம்பாப்பே அதிபர் ரொபேர்ட் முகபே மற்றும் எதிர்கட்சி தலைவர் மோர்கன் ஆகிய இருவருமே தேர்தலை மீண்டும் நடத்துவதற்கு ஒப்புகொண் டிருப்பதாகவும் அது நடைபெறுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கூறினார். ஒப்ப கொண்டிருப்பதாகவும் அது நடைபெறுவ தற்கு அனுமதிக்க வேண்டும் என்று கூறினார்.



அத்தோடு சர்வதேச சமுதாயம் சிம்பாப்வே விவகாரத்தில் தலையிடுவதற்கான நேரம் இது வல்ல என்றும் அவர் கூறினார். (அ-5)

# மகாவலியில் குளித்துக் கொண்டிருந்த பெண்ணை முதலை இழுத்துச் சென்றது

(கொழும்பு)

மகாவலி கங்கையில் குளித்துக் கொண்டிருந்த 30 வயது பெண் ஒருவரை முதலை ஒன்று இழுத்துச் சென்றுள்ளது. இச்சம்பவம் ஹசலக்க பொலிஸ் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்துள்ளது.

ஹசலக்க பொலிஸ் பிரதேசத்தைச் சேர்ந்த கலயாய என்ற இடத்தில் 30 வயது பெண் ஒருவர் மகாவலி கங்கையில் மாலை 6.30 மணியளவில் குளிக்கச் சென்றுள்ளார். இவர் குளித்துக் கொண்டிருக்கும்போது திடீரென ஆற்றில் மிதந்து வந்த முதலை அப்பெண்ணை இழுத்துச் சென்றுள்ளது.

இதனை அவதானித்த பிரதேசவாசிகள் உடனடியாக கூக்குரலிட்டு மேலும் பிரதேசவாசிகளை உதவிக்கு அழைத்து அப்பெண்ணை காப்பாற்ற முயற்சித்துள்ளனர். உடனடியாக ஹசலக்க பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து அங்கு வந்த பொலிஸாரின் உதவியுடன் சுழியோடிகள் ஆற்றில் பெண்ணை தேடியுள்ளனர்.

எனினும் அவர் கண்டுபிடிக்கப் பட்டவில்லை. முதலையினால் இழுத்துச் செல்லப்பட்ட பெண்ணின் சடலத்தையேனும் கண்டுபிடித்து மீட்பதற்காக கடற்படையைச் சேர்ந்த சுழியோடிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக ஹசலக்க பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-5)

# தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் எரிபொருட்களின் விலைகள் உயர்வு

(கொழும்பு)

தமிழ் சிங்கள புத்தாண்டிற்குப் பின்னர் டீசல் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படலாம் என பெற்றோலியக் கூட்டுத்தாபன சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது,

தற்போது டீசல்கள் மூலம் ஒரு லீற்றருக்கு 28 ரூபாவும் மண்ணெண்ணெய் மூலம் லீற்றருக்கு 25 ரூபாவும் நட்டம் ஏற்பட்டு வருகிறது.

இதன் காரணமாகவே கூட்டுத்தபானம் தமிழ், சிங்கள் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின் னர் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் உலக சந்தையில் எரி பொருட்களின் விலை மிக வேகமாக பல மடங்கு உயர்ந்துவந்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பிற்கு ஏற்ற வகையில் எரிபொருட்களின் விலைகளையும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஏ.எம்.பௌஸி இது குறித்து தெரிவித்திருப்பதாவது, கடந்த மாதம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 3800 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே தமிழ் சிங் கள புத்தாண்டுக்குப் பின்னர் எரிபொருட்களின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

# சலுகை விலையில் அரிசிக் கொள்வனவுக்கு மியன்மார் அரசாங்கத்துடன் உடன்படிக்கை

## பந்துல குணவர்தன தெரிவிப்பு

(கொழும்பு)

சலுகை விலையில் 50 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் மியன்மாருடன் உடன்படிக்கையை செய்துள்ளது. எதிர்வரும் சில தினங்களுக்குள் இந்த அரிசி இறக்குமதி செய்யப்படும் என அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போது பிரதேச மட்டத்தில் அரிசியின் விலை குறைவாக உள்ளதை காணக்கூடியதாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் நகர்ப்புறங்களுக்கு எடுத்து வரப்படும் போக்குவரத்துச் செலவு காரணமாக அரிசியின் விலை நகர்ப்புறங்களில் அதிகரித்துள்ளது. இதற்கு தீர்வு காணும் வகையில் விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வர்த்தக மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நுகர்வோருக்கு சலுகை விலையில் அரிசியைப் பெற்றுக்கொடுக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை நிறைவு செய்யும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ-7)

# பாகிஸ்தானிடமிருந்து ஆயுதக்கொள்வனவு இந்தியா கடும் அதிருப்தி

பாகிஸ்தானிடமிருந்து இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் இந்தியா மீண்டும் தனது அதிருப் தியினை வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலி களுக்கு எதிராக யுத்தத்தை முன்னெடுக்கும் நோக்கில் பாகிஸ்தானிடம் இலங்கை அரசாங்கம் அவசர இராணுவ உதவிகளை கோரியுள்ளதாக இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

60எம்.எம்.மோட்டார் குண்டுகள் 1 இலட்சத்து 50 ஆயிரம் கைக்குண்டுகள் ஆகியவற்றினை அவசரமாக பாகிஸ்தானிடமிருந்து இலங்கை கோரியுள்ளதாகவும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

25 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 81எம்.எம். 120 எம்.எம்.மற்றும் 130 எம்.எம்.மோட்டார் குண்டுகளை ஒரு மாதத்திற்குள் தமக்கு வழங்குமாறு இலங்கை வேண்டுகோள்விடுத்துள்ளதாகவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானிடமும் சீனாவிடமும் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வது குறித்து கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் இந் தியா கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-5)

# விடைத்தாள் மீள் பரிசீலனை விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 30ஆம் திகதி

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான முடிவுத்திகதி இம்மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

சகல பாடசாலை விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபரூடாக அனுப்ப வேண்டும் .தனிப்பட்ட பரீட்சாத்திகள் தனித்தனியாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7)

# அந்நிய நாட்டு தலையீடு புத்தாண்டில் அதிகரிப்பு

## வாக்கிய பஞ்சாங்கத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 60 வருட சுற்று வட்டத்தில் 22 ஆவது வருடமான சர்வதாரி வருடம் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.55மணிக்கு பிறக்கிறது. அன்று பிற்பகல் 12.55மணி தொடக்கம் இரவு 8.55 மணி வரை விஷு புண்ணியகாலமாகும்.

இக் காலத்தில் சிரசில் ஆல் இலையும் காலில் இலவம் இலையும் வைத்து மருந்து நீர் தேய்த்து நீராடி சிவந்த பட்டாயினும் சிவப்பு பச்சை கரையணிந்த புதிய ஆடையாயினும் அணிதல் வேண்டும்.

புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம், அனுசம், மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால், உத்தரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த வர்கள் தவறாது மருத்து நீர் தேய்த்தல் வேண்டும்.

அதிக மழை, தானிய விளைவு, பஞ்சம் நீங்குதல், காற்று குழப்பம், உயிர்ப் பயம், இனப் பூசல், அக்னி, ஆயுத பயம், அந்நிய நாட்டு தலையீடு அதிகரிப்பு, கொள்ளையர் ஆயுததாரிகள் பயம் என்பன பிறக்கும் புத்தாண்டுக்கான பலன்களாகும்.

சர்வதாரி வருடத்தில் இராசி ரீதியாக வரவு செலவு பலன் பின்வருமாறு.

| *இராசி* | *வரவு* | *செலவு* |
|---|---|---|
| மேடம் | 5பங்கு | 11பங்கு |
| இடபம் | 14 பங்கு | 2பங்கு |
| மிதுனம் | 2பங்கு | 2பங்கு |
| கர்க்கடகம் | 2பங்கு | 8பங்கு |
| சிங்கம் | 14பங்கு | 8பங்கு |
| கன்னி | 2பங்கு | 2பங்கு |
| துலாம் | 14பங்கு | 2பங்கு |
| விருச்சிகம் | 5 பங்கு | 11 பங்கு |
| தனு | 8பங்கு | 2 பங்கு |
| மகரம் | 11பங்கு | 11பங்கு |
| கும்பம் | 11பங்கு | 11பங்கு |
| மீனம் | 8பங்கு | 2பங்கு |

இவ்வாறு வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-5)

# க.பொ.த(சா/த)2007 முடிபுகள் -பகுப்பாய்வு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

| பாடம் | தோற்றிய மாணவர்கள் தொகை | A | B | C | S | W | சித்திவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| சைவ சமயம் | 210 | 190 | 14 | 4 | 2 | - | 100% |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 210 | 179 | 27 | 4 | - | - | 100% |
| ஆங்கிலம் | 210 | 82 | 32 | 55 | 32 | 9 | 96% |
| விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் | 210 | 74 | 63 | 52 | 21 | - | 100 % |
| கணிதம் | 210 | 125 | 37 | 23 | 23 | 2 | 99.1 % |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 210 | 153 | 38 | 14 | 5 | - | 100 % |
| அழகியல் பாடம் | | | | | | | |
| சங்கீதம் | 80 | 38 | 22 | 13 | 6 | 1 | 99% |
| நாடகமும் அரங்கியலும் | 19 | 15 | 3 | 1 | - | - | 100% |
| சித்திரம் | 111 | 4 | 5 | 31 | 51 | 12 | 89% |
| தொழினுட்பப் பாடம் | | | | | | | |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | 123 | 70 | 27 | 23 | 03 | - | 100% |
| வர்த்தகமும் கணக்கியலும் | 87 | 26 | 18 | 27 | 12 | 4 | 96% |
| மேலதிக பாடம் | | | | | | | |
| ஆங்கில இலக்கியம் | 30 | 4 | 2 | 8 | 10 | 6 | 80% |
| தமிழ் இலக்கியம் | 180 | 38 | 64 | 56 | 17 | 5 | 97% |
| சுகாதாரமும் உடற் கல்வியும் | 161 | 97 | 43 | 20 | 1 | - | 100% |
| புவியியல் | 12 | 3 | 4 | 4 | 1 | - | 100% |
| வரலாறு | 7 | 5 | 2 | - | - | - | 100% |
| அபிவிருத்தி | 30 | 26 | 4 | - | - | - | 100% |

# வடகடல் நிறுவனத்துக்கு புதிய இயந்திரம் இறக்குமதி?

(யாழ்ப்பாணம்)

குருநகர் பிரதேசத்தில் இயங்கி வரும் வடகடல் நிறுவனம் தனது உற்பத்திகளையும் குறைத்துக் கொண்டுள்ளது. மாதமொன்றிற்கு ஆயிரத்து 500 கிலோ மீன் பிடி வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது ஐந்நூறு கிலோ மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுவருகின்றது. உள்ளூரில் விதிக்கப்பட்டுள்ள மீன் பிடித்தடைகளை மீன் வலைகளை கொள்வனவு செய்யும் மீனவர்களது எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே தொழில் பாதிப்பிற்குக் காரணமெனவும் கூறப்படுகின்றது.

இப்போது ஆழங்குறைந்த கடற்பரப்பில் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் வடகடல் நிறுவனத்தால் உற்பத்திசெய்யப்படும் வலைகள் ஆழ்கடல் மீன் பிடிக்கே பொருத்தமானவையென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐ.நா. வின் நிதி உதவியின் கீழ் புதிய தொகுதி மீன் வலை உற்பத்தி இயந்திரங்கள் வடகடல் நிறுவனத்திற்கு என இறக்குமதி செய்யப்பட்வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியான இவ் இயந்திரத்தொகுதி குடாநாட்டை வந்தடையுமாயின் ஆழங் குறைந்த கடல் பாவனைக்கான மீன் பிடி வலைகளை உற்பத்தி செய்ய முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் இந் நிறுவனப்பணியாளர்களுக்கு கடந்த 3 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லையெனக் குற்றம் சாட்டப்படுகிறது.

(அ-5)

# பிரான்ஸ் கல்வி



பிரான்ஸ், அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் இங்கிலீஷ் கால்வாயை ஒட்டி அமைந்துள்ள ஒரு மேற்கு ஐரோப்பிய நாடாகும். கி.பி. 1789 இல் நடந்த பிரெஞ்சு புரட்சிக்குப் பின் நெப்போலியனால் ஆளப்பட்ட இந்நாடு அதன் பின் இன்று வரை பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. பிரெஞ்சு மொழியை தாய் மொழியாகக் கொண்ட இந்நாட்டில் கிட்டத்தட்ட 3கோடி மக்கள் வசிக்கிறார்கள். இதன் தலைநகரம் பரீஸ். அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் புரட்சியிலும் மருத்துவ அறிவியல் ஆராய்ச் சித் துறைகளிலும் இந்த நாடு உலகிற்கு பல நன்மைகளை தந்துள்ளது.

ஜி 8 கூட்டமைப்பு நாடுகளின் ஒரு அங்கமாகத் திகழும் பிரான்சின் பொருளாதாரம் உலகளவில் 6ஆவது இடத்தில் இருக்கிறது. இங்கு பயன்படுத்தப்படும் நாணயம் யூரோ.

**பிரெஞ்ச் கல்வியின் சில சிறப்புகள்:** பிரான்சின் கல்வி முறை உலகளவில் பெயர் பெற்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரிய நாடான பிரான்சில் கல்வி பயின்றவர்கள் இதனை ஒரு அரிய அனுபவமாகவே கருதுகிறார்கள். இங்குள்ள கல்வி முறையைப் பற்றி பேசி அறிவதை விட நேரில் அனுபவங்களை சந்தித்தால் தான் அதன் நுட்பங்களை உணரமுடியும் என்று கூறப்படுகிறது. பிரான்சில் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 14 ஆயிரம் வெளிநாட்டு மாணவர்களை கல்வி பயில அனுமதிக்கப்படுகிறார்கள்.

✦ பிரான்சில் உயர் படிப்பு படிக்கும்போது பிரெஞ்சு மொழி தெரிந்தால் மட்டுமே படிக்க முடியும் என்ற பொதுவான எண்ணம் இருக்கிறது. ஆனால் இங்கு ஏற்கனவே பயின்ற ஆசிய மாணவர்கள் இதனை பொய்யாக்கி இருக்கிறார்கள். உயர் கல்வி ஆங்கில வழியிலேயே இருப்பதால் நல்ல ஆங்கில அறிவே போதுமானது.

✦ யூரோவின் மதிப்பு உலகிலேயே அதிகம் என்பதால் இங்கு படிக்க பெரும் செலவாகும் என்று நம்பப்படுகிறது. ஆனால் கல்விக்கு பிரான்சில் பெரும் நிதியுதவிகள் பிரெஞ்ச் அரசால் தரப்படுகிறது. இதனால் கல்விக்கான கட்டணங்கள் மிக அதிகம் என்று கூறமுடியாது.

**பிராஸ் கல்வி முறை:** பிரான்சின் கல்வி முறை மிகவும் திட்டமிடப்பட்ட மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட முறையில் உள்ளது. பிரான்சின் கல்வி முறையைப் பொதுவாக 3பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

✦ ஆரம்பப் படிப்புகள் எனப்படும் என்செய்ன் மென்ட் பிரைமரி.

✦ பாடசாலைப் படிப்புகள் எனப்படும் சென்செய்ன் மென்ட் செகண்டரி.

✦ உயர் படிப்புகள் எனப்படும் என்செய்ன் மென்ட் சுப்பீரியர் ஆரம்பப் படிப்புகள் பெரும்பாலும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. பிரெஞ்சு குடியரசு நடத்தும் பாடசாலைகளே அதிகளவில் இருக்கின்றன. இதுதவிர தனியார் பாடசாலைகளும் கத்தோலிக்கப் படிப்புகளுக்கான பாடசாலைகளும் உள்ளன.

✦ செகண்டரி எடுஜுகேஷன் படிப்புகள் 7 ஆண்டுக்கானவை. முதல் 4 ஆண்டு படிப்புகள் கல்லூரி படிப்பு என்றும் அடுத்த 3 ஆண்டு படிப்புகள் லைசீ என்றும் அழைக்கப்படுகிறது. இந்தப் படிப்புகளை முடித்தவர் பக்காலே எனஅழைக்கப்படுகிறார்கள். இந்த நிலை படிப்புகள் முடித்தவர்கள் பிரிட்டனில் ஏ ஸ்கூல் / அமெரிக்காவின் ஆக்ட்/சாட்/அவுஸ்திரேலியாவின் மேல்நிலை கல்லூரி படிப்பு போன்றவற்றுக்கு இணையாகக் கருதப்படுகிறார் கள்.

**பிரான்சின் உயர் படிப்புகள்:** பிரான்சின் உயர் படிப்புகளின் சிறப்பு என்னவென்றால் பல துறை சார்ந்த படிப்புகள் இங்கு அதிகம் உள்ளது.தவிர, மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் அதிக அளவிலான கல் விப் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் ஆசி ரியர் எண்ணிக்கை காரண மாக பிரான்சில் கல்வி பயிலுவது ஒருமுழு மையான கல்வி அனுபவமாக திகழ்கிறது.



பிரான்சின் உயர்படிப்புகள் பொது வா க 2 பிரிவுகளாக உள்ளது. கிரா ண்ட்ஸ்இகோ ல்ஸ் மற்றும் பல்கலைக்கழக படிப்புகள் மிகவும் பெருமைக்குரிய படிப்புகளாகக் கருதப்படுகின்றன. கிராண்ட்ஸ் இகோல்சின் கீழ் உள்ள இகோல் பொலிடெக் னிக் படிப்புகளே பிரான்சில் பிரசித்தி பெற்றவை. இங்கு சேருவதற்கான அனுமதியும் பெரும் போட்டியை உள்ளடக்கியது.

இகோல் பொலிடெக்னிக் பாடசாலைப் படிப்புகள் உலகளவில் 4 ஆவது இடத்தில் உள்ளன. இங்கு ஆசிரியர்கள் நிரந்தரப் பணியில் அமர்த்தப்படுவது இல்லை. குறிப்பிட்ட துறைக்கு குறிப்பிட்ட பாடப் பகுதியில் திறன் வாய்ந்த ஆசிரியர்கள் குறுகிய காலத்திற்கு மட்டுமே அமர்த்தப்படுவதால் சொல்லிக் கொடுக்கும் பகுதி முழுமையாக இருக்கிறது.




ஆய்வுப் பணிகள் நமது நாட்டில் உள்ளது போல பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப் படுவதில்லை. இதற்கென்ற தனியான சி.என்.ஆர்.எஸ், அல்லது இன்செர்ம் என்ற ஆய்வு நிறுவனங்கள் தனியாக உள்ளன. பிரான்சின் கல்விக் கட்டணம் குறைவுதான். உயர்கல்விக்கு பிரெஞ்சு அரசே நிதியுதவிசெய்வதால் படிக்கும் பிரிவைப் பொறுத்து ஆண்டுக் கட்டணம் மாறுபடுகிறது. பட்டமேற்படிப்புகளைக் கூட இரண்டு முதல் 4 இலட்ச ரூபாய்க்குள் படித்துவிட முடிகிறது.

குறைந்தவருமானம் உள்ளவர்கள் பிரெஞ்ச் கல்வி பயில தேர்வு செய்யப்படும் போது அவர்களுக்கு படிப்புக்கான கல்வி உதவித்தொகை மற்றும் குறைந்த கட்டண சலுகை போன்ற நிதியுதவிகள் தரப்படுகின்றன. அரசு சார்ந்த இன்ஜினியரிங் கல்லூரிகளில் குறைந்த கட்டணமே வசூலிக்கப்பட்டாலும் தனியாக இன்ஜினியரிங் கல்லூரிகளில் அதிக செலவாகிறது. பிரான்சின் சி.பி.ஜி.ஈ. எனப்படும் உயர்கல்விநிறுவனங்கள் பல்கலைக் கழக வரையறைகளுக்கு வெளியிலிருந்து செயல்படும் ஒரு அமைப்பாகும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரிவில் மட்டும் இங்கு பயிற்சிகள் நடத்தப் படுகின்றன. இந்த வகைப் படிப்புகள் பிரான்சில் பெரிதும் மதிக்கப்படுவ தோடு அதிகளவிலான அறிவியல் அறிஞர்களையும் நிர்வா கத்தலைவர்களையும் உரு வாக்கியுள்ளது. இந்த வகைப் படிப்புகள் பொதுவாக 2 ஆண்டுகள் கால அளவைக் கொண்டதாகஇருக்கின்றன.

**பிரெஞ்ச் கல்விக்கு விண்ணப்பிக்கும் முறை:**

பொதுவாக பிரான் சின் கல்வியாண்டு என்பது செப்ரெம்பரில் ஆரம்பமா கிறது. இருந்தபோதிலும் சில நிறுவனங்கள் கோடை காலம், வசந்தகாலம் மற்றும் மழைக்கால சிறப்பு வகுப் புகளை ஆரம்பிக்கின்றன. பிரான்சில் படிக்க விரும்புப வர்கள் கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகத்தை நவம்பர் 15 முதல் ஜனவரி 15க்குள் தொடர்பு கொள்ளவேண்டும். இங்கிருந்து பெற்ற விண் ணப்பங்களை பெப்ரவரி 1ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பாக மேலும் சில குறிப்புகள்.

✦ ஆண்டின் முதல் காலாண்டில் ஆரம்பமாகவுள்ள படிப்புகளுக்கு நவம்பர் 15ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

✦ ஆண்டின் 2ஆம் காலாண்டில் ஆரம்பமாகவுள்ள படிப்புகளுக்கு மார்ச் 15க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

✦ ஆண்டின் 3ஆம் காலாண்டிலும் 4 ஆவது காலாண்டிலும் ஆரம் பமாகவுள்ள படிப்புகளுக்கு மே 30 ஆம் திகதிக்குள்விண்ணப்பிக்கவேண்டும்.



✦ விண்ணப்பித்த ஒரு மாதத்திற்குள் படிப்புக்காக தேர்வு செய்யப்பட் டிருக்கிறோமா இல்லையாஎன் பதுதெரிவிக்கப்படும்.

**பதிவு செய்யும் முறை:**

பிரான்சில் என்ன படிக்கவிருக்கிறோம் என்பதை முடிவு செய்து விண்ணப்பங்களை பெற்றுவிட்ட உடன் நாம் என்ன படிக்க விருக்கிறோம் என்பதை முடிவு செய்ய வேண் டும். நாம் தேர்வு செய்துள்ள கல்வி நிறுவனம் தம்மை சேர்த்துக்கொள்ள சம்மதிக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.நம்மைசேர்த் துக் கொள்ள நமது கல்வித் தகுதிகளுடன் குடும்ப பொருளாதார சூழ்நிலைகளையும் சேர்த்து பிரெஞ்ச் கல்வி நிறுவன ங்கள் எடைபோடுகின்றன. பொதுவாக பிரெஞ்சுகல்வி நிறுவனங் கள் ஜுன் மாதத் திற்குள்ளாக படிப்பிற்கான சேர்க்கை அனுமதியை உறுதி செய்கின்றன. மிகுந்த ஆய்வுக்குப் பின்னரே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதன் பின் நேர் காணல் தேர்வுகளும் நடத்தப்படும். நம்மை சேர்த்துக் கொள்ள பிரெஞ்சு நிறுவனங்கள் முடிவெடுத்தபின் நமக்கு ஒரு அனுமதிக் கடிதம் அனுப்பப்படும். இந்த அனுமதிக் கடிதம் வந்ததும் நாம் விசா பெறுவதற்கான முயற்சியில் இறங்கவேண்டும்.

**என்.ஓ.சி. பெறத் தேவையானவை**

விசா பெறுவதற்குத் தேவையான என்.ஓ.சி.பெற 2ஆம் நிலையில் நாம் எடுத்துச் செல்ல வேண்டியவை இவைதான்.

✦ பிரெஞ்சு கல்வி நிறுவன சேர்க்கை அனுமதிக் கடிதம்.

✦ படிப்புச் செலவுக்கான கட்டணத்திற்கான நிதி நிலை பற்றிய அறிக்கை

✦ படிக்கும் காலத்தில் பிரான்சில் தங்குவதற்கான விபரங்கள் மற்றும் சான்று.

✦ பயோடேட்டா

✦ பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்

✦ தகுதி தரும் படிப்புக்கான சான்றிதழ்களின் நகல்கள்

✦ பாஸ்போர்ட் நகல்

✦ விமான டிக்கட்டின் நகல்

**R.U.பாலமுருகன்**

**பிரான்ஸ் விசா - யாருக்குத் தேவை?** : பிரான்சில் முழு நேரப்படிப்புகள், எராமஸ்/முண்டஸ் படிப்புகள், மாணவர் பரிமாற்றத் திட்டப்படிப்புகள், கோடை கால பிரெஞ்சு மொழிப் படிப்புகள் . குறுகிய காலப் படிப்புகள் போன்றவற்றை படிக்கச் செல்பவர்கள் விசா பெற வேண்டும். பிரெஞ்சு விசா 3 நிலைகளைக் கொண்டது.

**விசா பெறும் முறை:** தொடர்பாக www.embfrance.lk.org. என்னும் இன்டர்நெட் தளத்தில் மேலதிக தகவல்களைப் பெறலாம்.

# முதுமாணி வணிக நிர்வாகத் திட்டக் கல்வியை வழங்கும் அமெரிக்க உயர்கல்வி நிறுவனம்

அமெரிக்கக் கல்லூரியின் உயர்கல்வி நிறுவனம் (ACHE) 1995ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு அதனுடைய வளர்ச்சி இன்று இலங்கையின் மிகவும் சிறந்த ஒரு உன்னத கல்லூரியாக விளங்குகின்றது.

இது நல்ல சுற்றாடல் சூழ்நிலைகளுக்கேற்ப பயில்பவர்களுக்கு மிகவும் உதவியாகவும் கொழும்பு நகரத்தின் எல்லையான தெஹிவளையில் அமைந்திருக்கின்றது.

இந்த நிறுவனம் ஐந்து கிளை வளாகங்களைக் கொண்டது. இவை கண்டி, காலி, நீர்கொழும்பு, மாத்தறை மற்றும் குருணாகல் பகுதிகளில் அமைந்துள்ளன.

இவை அனைத்தும் அமெரிக்கன் முறையிலான சிறப்பான கல்வியையே வழங்குகின்றன. இங்கே மிகத் திறமை வாய்ந்த தனியான அபிவிருத்திக் கல்விகளையும் மாணவர்களுக்கு வழங்கி உற்சாகமும் ஊக்கமும் அளிக்கின்றனர்.

இந்த அமெரிக்கக் கல்லூரி உயர் கல்வி நிறுவனமானது (ACHE) உலகின் மிகச் சிறந்த கல்வியில் ஒன்றான முதுமாணி வணிக நிர்வாகக் கல்விக்கான மிகவும் சிறப்பான பாடத் திட்டங்களை எல்லாம் வட டகோட்டா மாநிலப் பல்கலைக்கழகத்திலிருந்து (NDSD) மாணவர்களுக்கான முன் மாதிரியான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த மேற்கூறிய பல்கலைக்கழகத்தின் சிறப்பை அமெரிக்காவின் மிகத் தலைசிறந்த கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குள்ளும் 4ஆவது தரமாகக் கணிக்கப்பட்டதை அமெரிக்காவின் சிறந்த சஞ்சிகையான பாவனையாளர் டயெஸ்ட் சஞ்சிகையில் 2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

வட டகோட்டா மாநிலம் பல்கலைக்கழகமானது கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளுக்கான வடமத்திய சபையினால் அங்கீகரிக்கப்பட்டு இதற்குள் சுமார் 12,500க்கு மேலான மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர்.

அப்போதிருந்தே ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் பல்கலைக்கழகங்களின் மாற்றங்களிலும் இலங்கை மாணவர்களுக்கான இரண்டு வருட கல்வித் திட்டங்களையும் வழங்கியது.

அதன் பிறகு உயர் கல்விக்காக மாணவர்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப்படவுள்ளனர். மேற்கூறிய சபையினால் இலங்கையின் பட்டதாரி திட்ட மாணவர்கள் முதல் இரண்டு வாரங்களுக்கான கல்வியை இலங்கையிலேயே கற்பிக்கின்றனர்.

அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கு முன்பதாக அங்கீகரிக்கப்பட்ட முதுமாணி வணிக நிர்வாகக் கல்வித் திட்டத்தின் பின் பட்டதாரிக்கான திட்டங்களை வகுத்து பாடங்களை ஆரம்பித்துள்ளோம். தற்பொழுது முதுமாணி வணிக நிர்வாகப் படிப்பினை வட டகோட்டா மாநில பல்கலைக்கழகத்தின் ஊடாக மாணவர்களின் திறமைக்கேற்ப முதலாவது வருடத்தின் தொழிற் பயிற்சியை விசேட பங்கினை இலங்கையில் கற்பதுடன் இரண்டாவது ஆண்டில் பயிற்சித் திட்டங்கள் வட டகோட்டா மாநில பல்கலைக் கழகத்தின் ஊடாக மாற்றி கற்க முடியும்.

இந்த வட டகோட்டா மாநில பல்கலைக் கழகமானது வணிகத்துறையில் வெவ்வேறு முறையிலான கற்பித்தலை கடைப்பிடிக்கின்றது. அவை விவாதக்கல்வி, ஒன்றிணைந்த மற்றும் தனிப் பட்டதிட்டங்கள், ஆங்காங்கே ஆய்வுகள், கணனி தேர்ச்சிகள், வகுப்பறை கருத்தரங்குகள் ஆகிய விரிவுரைகளினூடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல், தொடர்பாடல் திறமை ஆகிய திறமைகள் ஒரு மாணவனின் வாழ்க்கை வணிகத்தின் நல்ல நிலைமைக்கு இட்டுச் செல்லும்.

இந்த முதுமாணி வணிக நிர்வாகத் திட்டத்தில் அநேகமான விசேட அம்சங்கள் உள்ளன. அவை ஒரு மாணவன் அமெரிக்கச் செலவுகளை எப்படிப் பெற்றுக்கொள்கின்றான் என்பதையும் மற்றும் மேலதிகமாக இந்த வட டகோட்டா மாநிலப் பல்கலைக்கழக முதுமாணி வணிக நிர்வாகத் திட்டங்களையும் உள்ளடக்கி AACSB என்னும் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. இவை தற்பொழுது உலகிலேயே மிகக் குறைந்த 15% வீதமான மிகத் திறமையான வுணிகக்கல்வி நிலையம் என உலகிலேயே அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த ACHE என்பது முற்றிலும் திட்டவட்டமான பயிற்சிப் பாடசாலை. இங்கே அநேகமாக மாணவர்கள் தங்களின் முழுமையான சக்திகளையும் திறமைகளையும், ஐயம் திரிபுற கற்றுக்கொள்வதற்கான பயிற்சியின் போது வழங்குகின்றனர். அமெரிக்க மாணவர்களுடன் போட்டி போடுமளவிற்கு இவர்கள் ஆயத்தப் படுத்தப்படுகின்றனர்.

எங்களுடைய மாணவர்கள் அதி சிறந்த மேலதிகமான முயற்சிகளினால் பல்வேறு புலமைப் பரிசில்களைத் தட்டிக்கொள்கின்றார்கள். இந்த ACHE மாணவர்களுக்கு அதிகப்படியான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள். அவை,

நூல் நிலையம், நல்லொழுக்க நூல் நிலையம், கணனி ஆய்வுகூடங்கள், இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் விலங்கியல் ஆகியவற்றுக்கான ஆய்வுகூடங்கள், வசதியான வகுப்பறைகள், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு வசதிகள் அடங்கிய மாணவர் பொழுது போக்கு அறைகள் ஆகிய வசதிகளுடன் இவற்றிற்கெல்லாம் மேலாக மாணவர்களுக்கு கடன் வழங்கும் திட்டங்களும் ஏற்படுத்தியுள்ளன.

இவற்றுடன் மாணவர்களுக்கான பல்தேசிய பல்கலாசார கல்விகளையும் சுற்றாடல்களுக்கேற்ற கல்வியாக அமெரிக்கன் கல்லூரி உயர் கல்வி நிறுவகத்தில் கற்பிக்கப்படுகின்றது.


இந்த முதுமாணி வணிக நிர்வாக கல்வித் திட்டம் எதிர்வரும் 2008 மே மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு கீழ்த்தரப்பட்டுள்ள தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சாமரபெரேரா தொலைபேசி : 077 3070146.

# மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றி இலக்கு 253 ஓட்டங்கள்

(போட் ஒப் ஸ்பெயின்)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 253 ஓட்டங்களை நிர்ணயித்தது இலங்கை அணி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம்



சதம் பெற்ற மகிழ்ச்சியில் திலான் சமரவீர

மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் இலங்கை அணி முன்னிலை வகிக்க தீர்க்கமான இரண்டாவது டெஸ்ட் கடந்த 3ஆம் திகதி போட் ஒப் ஸ்பெயினில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் ஹைல் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 278 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சாமரசில்வா 76 ஓட்டங்களையும் டில்சான் 62 ஓட்டங்களையும் மற்றும் வர்ண புர 35, வான்டொட் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் எட்வேட்ஸ் 4 விக்கெட்டுக் களையும் பவல், ரெய்லர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் பிராவோ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களை எடுத்திருந்தது.

3ஆம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 294 ஓட்டங்களை எடுத்து சகல விக் கெட்டுக்களையும் இழந்தது.

இதில் சர்வான் 57 ஓட்டங்களையும் சிமித் 47, சற்றக்கோன் 46 ஓட்டங்களையும் ஹைல் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 5 விக்கெட்டுக்க ளையும் வாஸ், துஷார தலா இரண்டு விக்



சமிந்த வாஸ்

கெட்டுக்களையும் மற்றும் அமரசிங்க ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 16 ஓட்டங்களால் பின்னிலையிலிருந்த இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 24.3 ஓவர்களில் 99 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 6 விக்கெட்டுக் களை இழந்து திணறியது.

எனினும் 7-வது விக்கெட்டுக்காக சமர வீரவுடன் இணைந்த சமிந்த வாஸ் நிதான மாக ஆடி இலங்கை அணியை மீட்டார்.

இந்த ஜோடி 7-வது விக்கெட்டுக்காக 138 ஓட்டங்களை எடுத்து இலங்கை அணியை கௌரவமான இலக்கிற்கு மீட்டெடுத்தது.

இந்நிலையில் சமிந்தவாஸ் 45 ஓட்டங்க ளுடன் ஆட்டமிழக்க அடுத்துக் களமிறங்கிய துஷாரவும் நிதானமாக ஆடினார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய சமரவீர 173-வது பந்தில் தனது சதத்தை பூர்த்தி செய்தார்.

இறுதியில் இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களை யும் இழந்து 268 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சமரவீர 125 ஓட்டங்களையும் சமிந்த வாஸ் 45 ஓட்டங்களையும் எடுத்தனர். முன்னதாக முதல் தர வரிசை துடுப்பாட்ட வீரர்களான வான்டொட் 1, வர்ணபுர 0, சங்கக்கார 14, ஜெயவர்த்தனா 12, டில்சான் 25 மற்றும் சாமரசில்வா 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர் 4 விக்கெட்டுக்களை யும் பவல், எட்வேட்ஸ், பிராவோ மற்றும் ஹைல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 253 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்குகின்றது.

இலங்கை அணியின் இன்னிங்ஸ் நிறைவடைய மூன்றாம் நாள் ஆட்டநேரம் முடிபடைந்தது. நான்காம் நாளான நேற்று (இலங்கை நேரப்படி-இரவு) ஆட்டம் நடைபெற்றது. (5)

## அடுத்த உலகக்கோப்பையில் நிச்சயம் விளையாடுவேன் - சச்சின்

(புதுடில்லி)

2011ஆம் ஆண்டு நடைபெறும் உலக கோப்பை போட்டியில் விளையாடுவேன் என்று சச்சின் டெண்டுல்கர் கூறியிருக்கிறார். தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள போட்டியில் அவர் இது தொடர்பாக கூறியிருப்பதாவது,

உலக கோப்பையை வெல்ல வேண்டும் என்பது என்னுடைய நிறைவேறாத கனவாக இருக்கிறது. எனவே அடுத்த உலகக் கோப்பையில் நிச்சயம் விளையாடுவேன். இப்போதைக்கு கிரிக்கெற் விளையாடுவதை மிகவும் நேசிக்கிறேன் எதிர்காலம் பற்றி அதிகம் யோசிப்பதில்லை.

கிரிக்கெற் வீரர்கள் ஏலம் விடப்பட்டுள்ளதால் கிரிக்கெற் விளையாட்டு பாதிக்கப்படாது. என்னை பொறுத்தவரை நான் ஒரு போதும் பணத்திற்காக கிரிக்கெற் விளையாடியதில்லை இந்திய அணியில் இளம் வீரர்கள், மூத்த வீரர்களுக்கு இடையே மோதல் இல்லை. பத்திரிகைகள் தான் இப்படி தவறாக செய்தி வெளியிடுகின்றன.

அவுஸ்திரேலியாவில் ஹர்பஜன்சிங் விவகாரம் பெரும் சர்ச்சையாக உருவான போது நான் ஹர்பஜன்சிங்கிற்கு ஆதரவாக நின்றேன்.



அதற்கு கார ணம் அவர் தவ றாக எதையும் சொல்லவில்லை என நான் அறிந் தது தான்.

சகவீரர் ஒரு வர் பிரச்சினை யில் சிக்கி தவிக் கும் போது மற்ற வீரர்கள் அவ ருக்கு உதவ வேண்டும். அதை நான் முன் னின்று செய்ய வேண்டும் என நினைத்தேன். எதிரணி வீரர்களை திட்டுவது சகஜமாக இருக்க லாம். ஆனால் கிரிக்கெற் ஆட்டத்தில் எதற்கும் ஒரு எல்லை வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## மூன்றாவது டெஸ்டிற்கான இந்திய அணி அறிவிப்பு

(அகமதாபாத்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய அணியில் வேகப்பந்துவீச்சாளர் முனாப் பட்டேல் இடம்பெற்றுள்ளார்.

அவர் ஆர்.பி.சிங்கிற்குப் பதிலாக அணியில் இடம்பெறுகிறார். இந்தியா -தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் எதிர்வரும் 11 ஆம் திகதி கான்பூரில் ஆரம்பமாகின்றது.

இந்த டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி நேற்று தேர்வு செய்யப்பட்டது.

அகமதாபாத் டெஸ்ட்போட்டியில் பங்கேற்ற அணியில் இடம்பெற்ற வேகப்பந்து வீச்சாளர் ஆர்.பி.சிங் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக முனாப் பட்டேல் அணியில் இடம் பெற்றுள்ளார். மேலும் ரமேஷ் பவாரும் அணியில் இடம் பெற்றுள்ளார்.

இந்திய அணித்தலைவர் அனில் கும்ளே காயத்தால் அவதிப்பட்டு வருவதால் அவர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டால் ரமேஷ் பவார் சுழற்பந்துவீச்சாளராக சேர்க்கப் படுவார்.

இதேபோல் வேகப்பந்துவீச்சாளர் இஷாந் சர்மா முழு உடல்தகுதிபெறும் பட்சத்தில் கான பூர் டெஸ்டில் விளையாடுவார்.

இந்திய அணியின் விபரம் வருமாறு.

கும்ளே (அணித்தலைவர்), சேவாக், ஜாபர் டிராவிட், கங்குலி, லக்ஸ்மன், தோனி, ஹர்பஜன் சிங், சிறிசாந், இர்பான் பதான் யுவராஜ், பியூஷ் சாவ்லா, கைப், இஷாந் சர்மா, முனாப் பட்டேல் மற்றும் ரமேஷ் பவார். காயம் காரணாக மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் சச்சின் விளையாட மாட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (5)

## கிரிக்கெற்றை உதறிய வீரர்

மேற்கிந்திய தீவுகளில் கடந்த ஆண்டு நடந்த உலக கோப்பை கிரிக்கெற் போட்டியில் அதிர்ச்சி வைத்தியம் அளித்த அணி அயர்லாந்து. லீக்கில் பாகிஸ்தானை தோற்கடிக்க சூப்பர்-8 சுற்றுக்கு முன்னேறி வியப்பு அளித்தது. இந்த அணியின் ஆரம்ப பந்து வீச்சாளர் லாங்போர்ட் சிமித் திடீரென கிரிக்கெற்றில் இருந்து விலகி இருக்கிறார்.

புதியதாக பிஸ்னஸ் ஆரம்பித்திருப்பதால் அதில் கவனம் செலுத்த வேண்டி கிரிக்கெற்றில் இருந்து ஓய்வு பெறுவதாகவும், இது மிகவும் கடினமான முடிவு என்றும் அவர் கூறியுள்ளார். அயர்லாந்து அணிக்காக 22 ஒருநாள் போட்டியில் ஆடியுள்ள சிமித் 25 விக்கெற்று களை கைப்பற்றி இருக்கிறார்.

**நியூசிலாந்து அணிக்கு புதிய தலைவர்**

நியூசிலாந்து கிரிக்கெற் அணி எதிர்வரும் 27ஆம் திகதி முதல் இங்கிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் 'இருபது-20' போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அணித்தலைவராக விக்டோரி துணைத் தலைவராக மைக்கலம் உள்ளிட்ட 5 வீரர்கள் இந்திய பிரிமியர் லீக்கில் ஆட இருப்பதால் அவர்கள் மே 1ஆம் திகதி அணியுடன் இணையவுள்ளனர். விக்டோரி அணியுடன் இணையும் வரை அணித்தலைவராக ஹேமி ஹவ் இருப்பார் என்று நியூ சிலாந்து தேர்வுகுழு தெரிவித்துள்ளது. (5)

## சரிவிலிருந்து வீறுகொண்டெழுவோம்

### இந்திய அணித்தலைவர் கும்ளே உறுதி

(அகமதாபாத்)

சரிவில் இருந்து அடுத்த டெஸ்ட் போட்டியில் வீறுகொண்டு எழுவோம் என்று இந்திய அணித்தலைவர் கும்ளே கூறினார். அகமதாபாத் டெஸ்ட் தோல்விக்கு பின் அவர் நிருபர் களிடம் கூறியதாவது.



முதல் இன்னிங்ஸில் 76 ஓட்டங்களில்சுருண்டு, அதன் பிறகு 2 ஆவது இன்னிங்ஸில் மீண்டு வருவது மிகவும் கடினமாகும். இந்த டெஸ்டில் இருந்து நாங்கள் நிறைய பாடம் கற்றுக்கொண்டு உள்ளோம். இந்த சரிவில் இருந்து நாங்கள் மீள்வோம். இதே போன்ற நிலைமையை நாங்கள் ஏற்கனவே சந்தித்திருக்கிறோம். பந்து வீச்சாளர்களை குறைசொல்ல முடியாது அவர்கள் தங்களது 100 சதவீத முழு திறமையையும் வெளிப் படுத்தினார்கள். ஆனால் பலன் தான் கிடைக்காமல் போய்விட்டது.

தென்னாபிரிக்க அணிக்கு முதல் 4 விக்கெற்றுகளை நாங்கள் விரைவில் கைப்பற்றினோம். ஆனால் 5ஆவது விக்கெற்றுக்கு இணைந்த டில்லியர்ஸ் கலிஸ் ஜோடி ஆட்டத்தின் போக்கையே மாற்றிவிட்டது. இவர்களை விரைவிலேயே வீழ்த்தி இருந்தால் ஆட்டம் வேறுமாதிரி அமைந்திருக்கும்.

முதல் இன்னிங்ஸைவிட 2ஆவது இன்னிங்சில் துடுப்பாட்டம் நன்றாக இருந்தது. இதில் நமது வீரர்கள் நல்ல ஆரம்பத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் அதனை நிறைய ஓட்டங்களாக மாற்ற தவறி விட்டார்கள். நாங்கள் கான்பூரில் நடக்கவுள்ள கடைசி டெஸ்டில் வீறு கொண்டு எழுவோம். இங்குள்ள சாதனைகள் நமக்கு சாதகமாக இருக்கின்றன. ஆடுகளத்தை இப்படி தான் தயார் செய்ய வேண்டும் என்று எந்த அறிவுரையும் நான் கொடுப்பது கிடையாது. இவ்வாறு கும்ளே கூறினார்.

**சிமித் கருத்து**

சிமித் தலைமையில் தென்னாபிரிக்க அணி பெற்ற 27 ஆவது டெஸ்ட் வெற்றி இதுவாகும். இதன் மூலம் தென்னாபிரிக்க அணித் தலைவர்களில் அதிக வெற்றியை பெற்று தந்தகுரோன் ஜேவின் 27 வெற்றி சாதனையை அவர் சமன் செய்தார். வெற்றி குறித்து சிமித் கூறுகையில், இது ஒரு அற்புதமான டெஸ்ட். நாங்கள் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத் தினோம். எங்களது பந்துவீச்சாளர் கடினமாக உழைத்தார்கள். நாங்கள் திட்ட மிட்டு செயல்பட்டோம்.

டில்லியர்சுக்கும், கலிசுக்கும் இது ஒரு அற்புதமான டெஸ்ட். மொத்தத்தில் அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி இதுவாகும். இன்னும் ஒரு போட்டி உள்ளது என்று எங்களது வீரர்களுக்கு தெரியும். எனவே தொடரில் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். 2-0 என்ற கணக்கில் தொடரை வெல்ல விரும்புகிறோம் என்று குறிப்பிட்டார். (5)

தேவையில்லாமல்–இடி இடி போலச் சிரிப்பவன் மழை கொட்டுவது போல் கண்ணீர் விட நேரிடும்.

–டென்மார்க்

வலம்புரி

# ஜே.வி.பியின் கொட்டம் விரைவில் அடங்கிப் போகும்

நாட்டில் பிரச்சினை இருக்க வேண்டும். அதன் மூலமே தமது கட்சியை வளர்க்க முடியும் என்ற எண்ணப்பாட்டுடன் செயற்பட்ட ஜே.வி.பிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது.

கட்சியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்சவை கட்சியிலிருந்து இடை நிறுத்துவதாக மத்திய குழு எடுத்த தீர்மானத்தை அடுத்து, விமல் வீரவன்ச ஜே.வி.பியின் தியாகிகள் தினக் கொண்டாட்டத்தைப் புறக்கணித்தார்.

இப்போது ஜே.வி.பி உடைந்து இரண்டு கட்சிகளாகிவிட்டமை பெரும்பாலும் உறுதியாகி விட்டது.

இந்தியாவை, நோர்வேயை, சமாதான உடன்படிக்கையை விமர்சித்த ஜே.வி.பியை இப்போது மக்கள் விமர்சிக்கின்றனர்.

நாட்டில் சமாதானம் ஏற்படுவதை விரும்பாமல் மனிதப் படுகொலைகள் –மனிதப்பேரவலம் நீடிப்பதைத் தொடர்ந்து ஆதரித்துவரும் அரசியல் கட்சிகளின் முகவரிகள் தொலைந்துபோவது இயற்கையின் நியதியாக இருப்பதை அனுபவ ரீதியாகக் காணலாம்.

அந்த நியதி ஜே.வி.பிக்கும் பொருந்தும் என்பதையே அந்தக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடும், பிளவும் வெளிக்காட்டி நிற்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, தம்மிடம் ஆட்சியைத் தந்தால் நாட்டில் வறுமையை ஒழிப்போம் என்றும், தாம் ஆட்சியை கைப்பற்றியதும் தற்போதைய ஆட்சியாளர்களை எந்த நாட்டிற்கு அனுப்புவதென்பதை தீர்மானிப்போம் என்றும் கூறியுள்ளார்.

ஒவ்வொரு பொதுத்தேர்தல் காலத்தின் போதும், நாட்டை விட்டு தப்பியோடும் ஜே.வி. பியின் தலைவர் சோமவன்ச, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றவில்லை என்பதை உறுதி செய்ததும் நாடு திரும்புவார்.

ஆக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றால் மட்டும் இலங்கையில் தங்கியிருக்கக் கூடிய ஓர் குற்றவாளி, இப்போது நாட்டின் வறுமை நிலை பற்றிப் பேசுவது இலங்கையில் இருக்கக் கூடிய மிகத் துர்ப்பாக்கியமான நிகழ்வாகும்.

அதேநேரம் பொது மக்களுக்குத் தன்னை ஒரு நேர்மை மிக்க அரசியல்வாதியாகக் காட்டிக் கொள்ளும் விமல் வீரவன்ச, மறைமுகத்தில் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டார்– செயற்படுகின்றார் என்பதை அந்தக் கட்சியே வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த வரவுசெலவுத்திட்டத்தின்போது அரசைக் காப்பாற்றுவதில் விமல் வீரவன்சவே மும்முரமாக ஈடுபட்ட தகவல் அவரின் பொய் வேடத்தைக் காட்டிவிட்டது.

வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிப்போம். அரசை வீட்டிற்கு அனுப்புவோம் என்றெல்லாம் கூறிவிட்டு, வரவுசெலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பில் ஜே.வி.பி கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டமைக்கு மூல காரணம் விமல் வீரவன்ச என்ற செய்தி, மக்கள் முன் அவர் கூறியவை அனைத்தும் பொய் என்பதை நிரூபித்து விட்டது.


அதன் ஒட்டுமொத்த விளைவே ஜே.வி.பியின் உடைவாகும்.

# நல்லைக் கந்தன் தேரோடும் வீதியில்

## நடமாடிய செல்லப்பா சுவாமிகள்

### இன்று செல்லப்பா சுவாமிகள் குருபூசை தினமாகும்

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"



என்ற திருமூலரின் திருவாக்கிற்கிணங்க "ஒருவனே தேவன்" என தம் சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்கள் பலர் யாழ்ப்பாணத்தின் நல்லைக் கந்தன் ஆலய முன்றலில் அமைந்துள்ள தேரடியில் வாழ்ந்து வந்துள்ளார். இதனால் இவர்களைத் தேரடிச் சித்தர்கள் எனவும் மக்கள் அழைப்பார்கள். இவர்களில் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை தேரடியில் கழித்து வந்த செல்லப்பா சுவாமிகளின் குரு பூசைதினம் இன்றாகும்.

கடையிற் சுவாமிகளின் சீடரான இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவராவார். நல்லூர்த் தேர்முட்டிக்குத் தென்புறமுள்ள நிலத்தில் வாழ்ந்துவந்த பொன்னம்மா என்னும் நாமமுடைய மங்கை வட்டுக் கோட்டையில் வாழ்ந்து வந்த வல்லிபுரம் என்பவரைத் திருமணம் செய்து இல்லறம் எனும் நல்லறம் செய்ததன் பயனாக அவர்களுக்கு இரு ஆண் பிள்ளைகளும், இரு பெண் பிள்ளைகளும் பிறந் தன. அவர்கள் நால்வரில் ஒரு ஆண் பிள்ளையின் பெயர் செல்லப்பா வல்லி புரம் தம்பதியினர் கமத்தொழில் செய்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர்.

இயற்கையிலேயே துடிதுடிப்பும், புத்திசாலித்தனமும் நிறைந்தவருமான செல்லப்பா தனது ஆரம்பக்கல்வியினை "கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலசாலையில்" சிறப்புற முடித்துக்கொண்டார்.

"எல்லா உலகமும் ஆனாய் நீயே"

என செல்லப்பா சுவாமிகள் மனம் இறைவனையே நாடியது. வீட்டில் இவரது நடவடிக்கைகளும் வழமைக்கு மாறாக மாறுபட்டு நின்றன. இவர் தன் பாட்டில் பாடுவதும், ஆடுவதுமாகத் தன்னிலை மறந்து திரிந்தார். நல்லூரான் வீதியிலே வீடு அமைந்திருந்ததால், அர்த்த ஜாமத்தில் எழுந்து சென்று நல்லூரான் முன் நின்று ஆடிப்பாடுவதும், இடி யெனச் சிரிப்பதும் பலத்த சத்தத்தில் கைதட்டுவதும், ஆகாயத்தைப் பார்த்தவாறு கிறுக்குப் பிடித்தவர் போல் நடப்பதுமாக இவரது காலங்கழிந்தது.

இவரது நடவடிக்கைகள்ளைக் கண்ணுற்ற உறவினர்கள் பைத்தியம் பிடித்துவிட்டது என நினைத்தனர். இவ்வாறு நல்லைக் கந்தனோடு தன்பாட் டில் பேசிக் கொண்டு திரிந்த செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமிகளின் சீடரானார். நல் லைக் கந்தன் தேரடியைத் தனது நிரந்தர உறைவிடமாகக் கொண்டார். தேரடியில் அமைந்திருந்த வில்லமரத்தடியில் அமர்ந்திருந்து தன்னுடைய சிந்தனையில் தோன்றுபவற்றை வாய்விட்டுக் கூறிக் கொண்டிருந்தார்.

தேரடியில் செல்லப்பா சுவாமிகள் வீற்றிருக்கும் போது "முழுவதும் உண்மை" என்றும் "ஒரு பொல்லாப்புமில்லை என்றும்" "எப்பவோ முடிந்த காரியம் என்றும் நாமறியோம்" என்றும் நான்கு வாக்கியங்களைக் கூறிக்கொண்டிருப்பார். பின்னாளில் இவை மகாவாங்கியங்கள் எனப் போற்றப்படுகின்றன. குரு சீட முறையில் பலகாலம் செல்லப்பா சுவாமிகளின் சீடராக விளங் கிய யோகர் சுவாமிகள் இவற்றை நன் மொழி உபதேச மாகக் கொண்டு நடந்தார்.

பின்னாளில் இவற்றை யோகர் சுவாமிகள் "செப்பமுடியாதடி தங்கமே தங்கம் செல்லப்பன் திருவாக்கு தங்கமே தங்கம்" எனப் பாடியுள்ளார். ஞானதேசிகர் நல்லூர்த் தேரடிச் செல்லப்பா சுவாமிகளின் தாள் பணிந்து அவர் பெருமை போற்றி நாமும் அவர் வழி பின்பற்றி வாழ்வோமாக.

யாழினி – விஜயஈஸ்வரன்
நல்லூர்.

# ஐ.நா.கண்காணிப்பாளர்களை இலங்கை அனுமதிக்க வேண்டும்

## பிரித்தானியா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கண் காணிப்பாளர்கள் குழு அமைக்கப்படுவதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரித்தானியா கோரிக்கை விடுத் துள்ளது.

பிரித்தானியாவுக்கு பயணத்தினை மேற்கொண்ட இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவைச் சந்தித்த பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் டேவிட் மிலிபான்ட் இக் கோரிகையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் லூய்ஸ் ஆர்பரின் அறிக்கைக்கு அமைவாக இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் கண் காணிப்பாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். பிரித்தானியா அதனையே விரும்பு கின்றது.

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க வெளியில் இருந்து ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றார்.

இதனிடையே இலங்கை அரசி னால் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கட்சிக் குழுவை சேர்ந்த பிரதிநிதிகள் விரைவில் பிரித்தானியாவுக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் அங்குள்ள அதிகா ரப்பகிர்வு தொடர்பான விடயங்களை ஆராய்வார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

(அ–5)

# இந்த வருடத்துள் 34 ஆயிரம் வீடுகள் அமைக்க தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை

(கொழும்பு)

இந்த வருடத்திற்குள் 34 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. கமநெகும, கிழக்கு நவோதயம் போன்ற திட்டங்களின் கீழ் இந்த வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படும் என வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

வளமான கிராமங்கள் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 850 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் கருத்திட் டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் இத்திட்டம் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. பரோபகாரிகளின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்பு நிதித்திட்டம் ஊடாக மாவட்டம் ஒன்றுக்கு குறைந்தது 100வீடுகளை அமைத்துக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டு 29 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு இத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்ததாக அமைச் சர் திருமதி பேரியல் அஸ்ரப் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் தொடர்மாடி வீடுகளை அமைப்பதற்குதிட்டமிடப்பட்டிருப்பதாக அதிகார சபையின் தலைவர் எம்.ஐ.ரவிக் தெரிவித்துள்ளார்.

(அ–7)

ஓலைச் சுவடிகள் 09

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

## நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### ஞாயிற்றுக்கிழமை சிவந்தபூக்களால் சூரியனைப் பூஜிக்க வேண்டும்

பிறவிரத நாட்களைப் போலவே ஞாயிற்றுக்கிழமையையும் அனுஷ்டிக்கவேண்டும். ஆனாலும் சூரியனுக்கு சிவப்புப் பூக்களாலும், இரத்த சந்தனத்தாலும் பூஜை நடத்தவேண்டும் என்பது விதிமுறை. சூரியன் சம்பந்தமாக இந்தநாளை அனுஷ்டிப்பதால் ஞாயிறு விரதத்தை இரவிவார விரதம் என்று அழைப்பதுண்டு. இந்த விரதம் இருப்பவர்கள் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் உப்பு, எண்ணெய் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. சூரியன் மறையும் நேரத்துக்குப் பின் உணவருந்துவதை நிறுத்தி மறுநாள் உதயம் வரை உபவாசமிருக்க வேண்டும் என்பதே ஞாயிற்றுக்கிழமை விரதத்தின் சிறப்பு.

இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர்கள் சருமநோய்கள் மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோய்களைத் தவிர்க்கலாம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

# காண்டம் பார்த்து பரிகாரம் செய்த அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே

(கொழும்பு)

அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சில தினங்களுக்கு முன்னர் காண்டம் பார்த்துள்ளதுடன் அதற்கான பரிகாரங்களையும் மேற்கொண்டிருந்ததாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

காண்டம் பார்த்த அமைச்சர் அதற்கான பரிகாரங்களை வீட்டில் வைத்து மேற்கொண்டுள்ளார் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

1953 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி நீர்கொழும்பு கொச்சிக்கடை வெலிகனப் பகுதியில் பிறந்த அவர், நீர்கொழும்பு ஆவேமரியா கன்னியர் மடத்திலும், மாரிஸ்ரெல்லா வித்தியாலயத்திலும் பயின்று 1970 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து தனது அரசியல் வாழ்க்கையினை ஆரம்பித்தார்.


அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே 1983 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கந்தான தேர்தல் தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1989 ஆம் ஆண்டு முதன்முதலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான அவர்; 1996, 2000, 2001, 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்று தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பதவி வகித்தார்.

குடும்பத்தில் 3ஆவது பிள்ளையாகப் பிறந்த இவருக்கு மூன்று சகோதரர்கள் உள்ளனர். 1994ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கம் ஆட்சி அமைத்ததும் பிரதி நிதி மற்றும் ஊடக அமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், பின் வர்த்தக நுகர்வோர் அமைச்சராகவும் விமானப் போக்குவரத்து அமைச்சராகவும் பதவி வகித்தார்.

2004 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அரசின் பிரதம கொறடாவும் நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் பதவி வகித்தார். 1972 ஆம் ஆண்டு கணித ஆசிரியராகப் பணியாற்றிய அவர், சட்டக் கல்லூரியில் பயின்று 1974 ஆம் ஆண்டு சட்டத்தரணி ஆனார்.

1977 ஆம் ஆண்டு முதல் சட்டத்த்ரணியாகக் கடமையாற்றினார். அமைச்சர் ஜெயராஜின் மனைவியின் பெயர் சுதர்ஷினி ஆகும். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். சிறந்த சட்டத்தரணியாக விளங்கிய அமைச்சர் ஜெயராஜ், கடந்த வருடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (ச-5)



படுகொலை செய்யப்பட்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் வீட்டுக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சரின் உறவினர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## நிர்வாகத்தின் முடிபின் பிரகார...

வேளை மடு தேவாலயத்திலிருந்த கன்னி மாதா சொரூபம் முழங்காவல் பகுதிக்கு மத குருமார்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மன்னாருக்குக் கடந்த வெள்ளிக்கிழமை சென்றிருந்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகா கள நிலைமைகளை ஆராய்ந்திருந்தார். பின்னர் அவர் விடுதலைப் புலிகளின் அழுத்தங்களினாலேயே கன்னி மாதா சிலையை தேவாலய உறுப்பினர்கள் அங்கிருந்து அகற்றியதாக டெய்லி நியூஸ் நாளேட்டுக்கு தெரிவித்திருந்தார்.

பொன்சேகாவின் கருத்து மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்புக்கு கடுமையான விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. எமக்கு விடுதலைப்புலிகளிடமிருந்து எந்த அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை.

எமது முடிபின்படியே கன்னிமாதா சிலையை நாம் அகற்றியிருந்தோம். எமக்கு எந்தத் தரப்பிடமிருந்தும் அழுத்தங்கள் ஏற்படவில்லை. நாம் இரு தரப்பினதும் கருத்துக்களை கேட்டறிவதுண்டு.

ஆனால் முடிபுகளை நாமே சுயமாக எடுப்போம் என்று ஆயர் தெரிவித்திருந்தார். அந்தப் பகுதியில் கத்தோலிக்க மத குருமார்கள் கள நிலைமை தொடர்பாக மேற்கொண்ட மிக அவதானமான ஆய்வுகளின்பின்னர் இந்த முடிபை எடுத்திருந்தனர்.

அதன்பின்னரே கன்னிமாதா சிலை அகற்றப்பட்டது. அதற்கான உத்தரவுகளை நான் வழங்கியிருந்தேன் என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார். (ச)

## மரதன் ஓட்டப் போட்டியாளர்...

எவ்வாறு இடம்பெற்றது என்பது குறித்து விசேட பொலிஸ் குழு விசாரணை மேற்கொண்டு வருகின்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபருமாகிய என்.கே.இலங்கக்கோன் தெரிவித்தார்.

இவ் விசாரணைகளின்போது பாதுகாப்புத் தொடர்பாக ஏற்பட்டிருந்த குறைபாடுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படுவதோடு அதற்கான காரணங்களும் கண்டறியப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, வெலிவேரியப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பானது மரதன் ஓட்டப் போட்டியாளராக வருகை தந்திருந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் இதுவரை மேற்கொண்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்தில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளையடுத்தே இது ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தற்போது சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இரகசியப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் அமைச்சர் மேற்படி வைபவத்திற்கு வருகை தரவுள்ளார் என்பது உறுதியாக்கப்பட்டதன் பின்னர் அப் பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஆயினும் இவ்வாறானதொரு குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறித்துப் பொலிஸாருக்குப் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து விசேட பொலிஸ் குழுவொன்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் இலக்கு வைக்கப்பட்டுள்ள அரசியல் பிரமுகர்களின் பட்டியலில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பெயரும் இடம்பெற்றிருப்பதாகப் பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அமைச்சருக்குரிய பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறித்துப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார். (ச-5)

## ஹெப்பிட்டிக்கொல்லாவவில்...

நேற்றுக் காலை 8.45 மணியளவில் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த ஊர்காவற்படையினர் மீது கிளைமோர்த் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த 2 ஊர்காவற்படையினர் ஹெப்பிட்டிக்கொல்லாவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் இடம்பெற்ற பகுதியினை சிறப்பு அதிரடிப் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியுள்ளனர். இதேவேளை கண்டி மாவட்டத்திலுள்ள அலவத்துக்கொடப் பகுதியில் 500வீடுகளுக்கு மின்வழங்கும் மின்மாற்றிகள் நேற்று வெடித்துள்ளன. இந்த வெடிப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை. (ச-2,5)

## தற்கொலைக் குண்டுத் தாக்குதலில்...

கொல்லப்பட்டவர்களில் தேசிய தடகள விளையாட்டுப் பயிற்சியாளர் லக்ஷ்மன் அல்விஸ், பிரபல மரதன் ஓட்ட வீரர் கருணாரட்ண ஆகியோரும் அடங்குகின்றனர்.

மேல் மாகாணத்திலுள்ள கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சக்தி வாய்ந்த வெடிகுண்டுத் தாக்குதல் ஒன்றில் அமைச்சரவையின் மூத்த அமைச்சரும் வீதி அபிவிருத்தி பெருந்தெருக்கள் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட சுமார் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை கம்பஹா மாவட்டத்தின் வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த, சிங்கள-தமிழ் புத்தாண்டை ஒட்டிய மரதன் ஓட்டப் போட்டி ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்த அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே, அந்த ஓட்டப்போட்டியினைத் தொடக்கி வைப்பதற்கு சில நிமிடங்கள் முன்னதாக இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றிருக்கின்றது.

இதில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயுடன் இலங்கையின் முன்னாள் தடகள வீரரும் தெற்காசிய மரதன் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றிருந்தவருமான கே.எஸ்.கருணாரட்ண மற்றும் தேசிய தடகள பயிற்றுவிப்பாளர் லக்ஷ்மன் டி.அல்விஸ் உட்பட பொதுமக்களும் கொல்லப்பட்டிருப்பதாகவும் சுமார் 90ற்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கம்பஹா மாவட்டத்தின் மூத்த பொலிஸ் அதிகாரியான எஸ்.எஸ்.பி.ஹெக்டர் தர்மசிறி உட்பட காயமடைந்தவர்கள் அருகிலுள்ள கம்பஹா மற்றும் ராகம தேசிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் மிக மோசமான நிலையிலிருந்த நால்வர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்புத் தரப்பினர் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனாலும் ஆரம்ப விசாரணைகளிலிருந்து இந்தக் குண்டுவெடிப்புக்கு விடுதலைப்புலிகள் அமைப்பின் தற்கொலைக் குண்டுதாரியே காரணம் என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தேசிய தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

இறக்கும்போது இவர் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் பொருளாளராக்வும் கடமையாற்றியிருந்ததோடு, அடுத்த மாதம் கிழக்கு மாகாண சபைக்காக இடம்பெறவிருக்கும் மாகாண சபைத்தேர்தலையொட்டி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்டத்துக்கான அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தார் எனவும் தெரியவருகின்றது.

அரசாங்கம், விடுதலைப்புலிகளுடனான யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகியதன் பின்னர் தென்னிலங்கையில் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட இரண்டாவது அமைச்சர் இவர் ஆவார்.

இதற்கு முன்னர் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி அமைச்சரவை அந்தஸ்தற்ற தேச நிர்மாண அமைச்சர் தஸநாயக்க, யா-எலப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-2, 5)

## நூரை...

ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அலரி மாளிகையில் கூடிய அரச பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே அமைச்சரின் இறுதிக் கிரியை நடத்துவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் இறுதிக் கிரியைகள் தொடர்பான நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளதோடு இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 12.30 மணியளவில் கட்டானையிலுள்ள மறைந்த அமைச்சரின் இல்லத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படவுள்ளது. (ச-5)

## அமைச்சர்...

செயற்பாடுகளை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

இந்தத் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த லக்ஷ்மன் டி.அல்விஸ். முன்னாள் மரதன் ஓட்ட வீரர் கே.ஏ.கருணாரட்ண உள்ளிட்ட பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அனுதாபம் தெரிவிப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-2)


**MATHS CENTRE**

**M.M.N ROAD - NELLIADY**

❖ வடமராட்சியில் உள்ள சிறந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

❖ புதிய பிரிவு (கலை)

ஆரம்பம் :- 09.04.2008 புதன்

A.M. 7.00

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

(ச-970)


## ஜெயராஜின்...

அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவிப்பதாக ஜனாதிபதி கூறினார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவத்தை அறிந்தவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஹெலிகொப்டரில் பிளேசிலுள்ள அவரது இல்லத்துக்குச் சென்றிருந்தார்.

அங்கு அவரது உறவினர்களுடன் கலந்துரையாடி தனது அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார். (ச-2)

## போரில் வெற்றி பெறும்...

யாழ்.குடாநாட்டை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் ஏ-9 நெடுஞ்சாலையைத் திறக்கப் போவதில்லை. இந்த நெடுஞ்சாலையைத் திறப்பதற்கான கோரிக்கையை 2006 ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சின்போது விடுதலைப்புலிகள் முன்வைத்திருந்தனர்.

ஏ-9 பாதை மூடப்பட்டுள்ள போதும் யாழ். குடாநாட்டிற்கான உணவு விநியோகம் நடை பெறுகின்றது. யாழ்.குடாநாட்டின் பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. யாழ்.குடாநாட்டில் சனத்தொகை மதிப்பீடுகளை நாம் மேற்கொண்டு அங்கு வாழும் மக்களுக்கு சிறப்பு அடையாள அட்டைகளை விநியோகம் செய்ய தீர்மானித்துள்ளோம். இதற்கு 21 மில்லியன் ரூபா செலவாகும் என்றார் அவர். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.